# வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

# 2017

## செயலாற்றுகை அறிக்கை

**(2017.01.01 – 2017.12.31 வரை)**

**9 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.**

## தொலைநோக்கு

**" வலுவாதாரமிக்க வளமான தேசம்"**

## பணிநோக்கு

**" மனித சமுதாயத்திற்கான நலன்களை பகிர்ந்துகொள்வதை உறுதிப்படுத்தவதுடன், வெளியிட விலங்கினங்களைப் பாதுகாத்தல், தாவரங்களை பாதுகாத்தல், அபிவிருத்தி இவை மாத்திரமன்றி இயற்கையையும் பேணிப் பாதுகாப்பதுடன், கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் வலுவாதார பயன்பாட்டு சூழமைவுகளின் கீழ் வலுவாதார அபிவிருத்தி அணுகுமுறைகளின் ஊ டே நாடளாவிய ரீதியிலான நீடுநிலைத்த அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய தலைமைத்துவத்தின் கீழ் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை முகாமைப்படுத்தல்**

## பிரதான பணிகள்

- வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைகள் ஆகிய விடயங்கள் சார்ந்த கொள்கைகள், வேலைத்திட்டங்கள், செயற்திட்டங்கள் என்பனவற்றை தயாரித்தலும் பின்கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளலும்.
- 1937 இலக்கம் 02 ஐக் கொண்ட விலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- 1928 இலக்கம் 31 ஐக் கொண்ட தாவரவியல் பூங்காக்கள் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- 1982 இலக்கம் 41 ஐக் கொண்ட தேசிய மிருகக்காட்சிசாலைகள் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- வலுவாதார அளவீடுகள் மற்றும் சுற்றாடல் சுட்டிகளைத் தயாரித்தல்
- இலங்கை தாவரப் பாதுகாப்பு, தாவரவியல் பூங்காக்கள் என்பனவற்றின் பேணல் மற்றும் மலர் செய்கை மேம்பாடு
- கால்நடைகள், பறவையினங்கள் மற்றும் ஊர்வன ஆகிய பல்வேறு விலங்குகளை ஒன்றுதிரட்டல் மற்றும் காட்சிப்படுத்தல்
- வனசீவராசி வளங்களைப் பாதுகாத்தல்
- வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்களில் சுற்றுலா கைத்தொழில் மேம்பாட்டின் போது சுற்றாடல் பாதுகாப்பு குறித்து அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்
- வனசீவராசிகள் பொறுப்பு, வன விலங்கு பாதுகாப்பு நிதியம், மிருகக்காட்சிசாலைகள் பாதுகாப்பு நிதியம், தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் ஆகியன சம்பந்தமான நடவடிக்கைகளை செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல்

**கௌரவ வலுவாதார மற்றும் வனசீவராசிகள் பிரதி அமைச்சரின் ஆசிச்செய்தி**

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்களது 2017 ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கைக்கு ஆசிச் செய்தியொன்றை வழங்கக் கிடைத்தமையையிட்டு நான் பெரிதும் அகமகிழ்கின்றேன்.

வலுவாதாரமிக்க உலகொன்றுக்கு மனிதன் போன்று விலங்குகளும் இன்றியமையாதனவாகும். அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது மாத்திரமன்றி அவற்றின் வாழ்விடங்களான கிராமங்களையும், காடுகளையும் பாதுகாக்க வேண்டியதும் எம் முன்னேயுள்ள பெரும் சவாலாகும். இச் சவால்களை முறியடிப்பதற்காக 2017 ஆண்டில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் பற்பல. வலுவாதார அபிவிருத்தி தொடர்பாக தொடர்ந்தேச்சையாக முன்னெடுக்கப்பட வேண்டிய பெருந்தொகையான நிகழ்ச்சித்திட்டங்களும் திட்டமிடப்பட்டுள்ளன.

இலங்கையின் வலுவாதார அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்து இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கக்கூடியவாறும், இயற்கை அழிவுகளை மட்டுப்படுத்த முடியுமானவாறும் நடவடிக்கை எடுப்பதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

காப்பிட வனசீவராசிகள் வலையமொன்றைத் தாபித்தல், மலடாகக்கூடிய அச்சுறுத்தலுக்குள்ளாகும் அனைத்து வனவிலங்குகளையும் பாதுகாத்தல், அழிந்து போகக்கூடிய விசேட விலங்குகளைப் பாதுகாத்தல், இந்நாட்டு தாவரங்கள் மற்றும் மலர் வகைகளின் ஆய்வுகள் மாத்திரமன்றி பேணிப்பாதுகாக்கும் பணிகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மனித வளங்கள் மற்றும் யானை வளங்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் யானை மனிதன் மோதல்களைக் கட்டுப்படுத்தல், வனப்பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைகள் என்பனவற்றை மேம்படுத்தி வருமானமீட்டும் வழிவகையாக விருத்தி செய்வதற்கு இவ்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம், தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு ஆகியவற்றினால் 2030 ஆண்டளவில் ஐக்கிய நாடுகள் சபை அடைந்துகொள்ள கருதும் வலுவாதார அபிவிருத்தி குறிக்கோள்களை சிறப்பாக அடைந்துகொள்ள தேவையான திட்டங்கள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசேடமாக காடுகள் குறைவடைந்து, மனித வாழ்விடங்கள் அதிகரித்தமையின் காரணமாக உருவெடுத்த யானை - மனிதன் மோதல்களை மட்டுப்படுத்துவதும், மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கும் விலங்குகள் மற்றும் தாவரங்களை பேணுவதற்குமுரிய பாதுகாப்பினை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் தேசிய மிருகக்காட்சிசாலைகள், தேசிய தாவரவியற் பூங்காக்களை மேம்படுத்தல் மற்றும் யால வனப்பூங்காவை நவீனமயப்படுத்தல், விலங்குகளின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தல், விலங்கு ஆரணியங்கள் நிர்மாணித்தல் ஆகிய செயற்திட்டங்களை செயலுருப்படுத்துவதனூடாக இவ்விடங்களை தேசிய மற்றும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் கண்ணைக் கவரும் வகையிலான இடங்களாக மாற்றியமைத்ததனூடாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள இயலுமாயிற்று.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினால் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களையும், இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு பங்களிப்புக்களை நல்கிய புத்தசாசன அமைச்சர் கௌரவ காமினி ஜயவிக்ரம அவர்களுக்கும், வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் பிரதி அமைச்சர் கௌரவ சுமேதா ஜீ. ஜயசேன அவர்களுக்கும், அமைச்சின் செயலாளர் டக்ளஸ் நானயக்கார அவர்கள் உட்பட முழுமொத்த பணியாட்தொகுதியினருக்கும், அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவகங்களினதும் பிரதானிகள் உட்பட பணியாட்தொகுதியினருக்கும் எனது பாராட்டுக்கள்.

**ரவீந்திர சமரவீர**
வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

## கௌரவ வலுவாதார மற்றும் வனசீவராசிகள் பிரதி அமைச்சரின் ஆசிச்செய்தி

தற்போது அனைவரினதும் பேசுபொருளாக விளங்குகின்ற நிலைபேறான உலகொன்றுக்கு வனசீவராசி வளங்களை பேணிப்பாதுகாத்து, வலுவாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குவதற்கு வழிகாட்டுகின்ற வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2017 ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கைக்கு ஆசிச் செய்தியொன்றை வழங்கக் கிடைத்தமையையிட்டு நான் பெரிதும் அகமகிழ்கின்றேன்.

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம், தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம், இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு என்பன எமது அமைச்சுக்குரிய நிறுவனங்கள் ஆவதுடன், புதிதாக வலுவாதார அபிவிருத்திச் செயலகமொன்றும் இணைந்து கொண்டுள்ளது.

மரம்செடி கொடி, விலங்குகள், சுற்றாடல், இயற்கை சமநிலையைப் பேணும் வகையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியின் மூலம் மாத்திரமே வலுவாதார அபிவிருத்தியை எம்மால் அடைந்து கொள்ள முடியும். எனினும் அது இலகுவான காரியமன்று. அது சவால் மிகுந்ததாகும். அச் சவாலை வெற்றிகொள்ள எமது அமைச்சினாலே முடிகின்றது.

2030 ஆண்டிற்காக இலங்கை வலுவாதார அபிவிருத்தி தொடர்பாக புதிய ஒழுங்குவிதிகள், கொள்கைகள் மற்றும் நிறுவக சட்டகம் என்பனவற்றை தயாரித்து, வலுவாதார அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றது. தற்போது உலக நாடுகள் எந்தவித வித்தியாசமுமின்றி முகங்கொடுத்துவரும் பிரதான சவால் இயற்கை அழிவுகளாகும். அவ் இயற்கை அழிவுகளை எதிர்காலத்தில் மட்டுப்படுத்துவதற்கு இப்போதிலிருந்தே வலுவாதார அபிவிருத்தி தொடர்பான அர்ப்பணிக்கப்புக்கள் அத்தியாவசியமாகும். அவ் வலுவாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு 17 குறிக்கோள்களூடே 169 இலக்குகளை அடைந்து கொள்ளவேண்டுமெனில், நாம் அர்ப்பணிப்புடன் பங்காற்ற வேண்டியது இன்றியமையாததாகும்.

விலங்கு—மனிதன் மோதலை கட்டுப்படுத்துவதற்காகவும், காட்டு யானைகள் பல்வேறு முறைகளின் ஊடாக கொல்லப்படுவதை தடுப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் உயரிய மேம்பாடு 2017 ஆண்டினுள் புலனாகியது. விலங்கு - மனிதன் சுமுகநிலை இன்று நாம் முகங்கொடுக்கும் அடிப்படை பிரச்சினையொன்றாகும். அந்நிலைமையை கிராமங்கள் போன்று நகரங்களில் வாழ்கின்ற மக்களும் எதிர்கொள்கின்றனர் எனலாம். யானைகளின் அச்சுறுத்தல் அதிகரிப்பதற்கும், யானை மனிதன் மோதல் உக்கிரமடைவதற்கும் காரணம் யானைகளின் நடமாட்ட பகுதிகளில் 95% மனிதன் பிடித்துக் கொண்டுள்ளமையாகும். யானைகளின் நடமாட்டப் பகுதிகளில் வாழ்கின்ற குடும்பங்களை இனங்கண்டு நியாயமானதொரு இழப்பீடு வழங்கப்பட்டு அவர்களை மீளக்குடியமர்த்தி யானையின் நடமாட்ட பாதைகளை விடுவித்தல். மக்களின் ஒத்துழைப்புடன் மின்வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் அவற்றை பராமரிப்பதனை சமுதாய அமைப்புக்களிடம் ஒப்படைத்தல். மனித குடியிருப்புக்களை அண்டியதாக நடமாடும் யானைகளை வனசீவராசிகள் காப்பிடங்களுக்கு விரட்டியடித்தல். தீங்கு விளைவிக்கும் யானைகளை புனர்வாழ்வளிக்கும் பொருட்டு யானை தரிப்பிடங்களை நிர்மாணித்தல். யானைகள் - விலங்குகளுக்கு தேவையான உணவு மற்றும் நீரினை இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடியவாறு வாழ்விடங்களை வளமாக்குதல். சட்டவிரோத வேட்டையாடல்களை நிறுத்துதல் மற்றும் வனசீவராசிகள்—மனிதனிடையே சுமுகநிலையைத் தோற்றுவிப்பது தொடர்பாக சாரணியர் நடவடிக்கைகளுடன் இணைந்து பணியாற்றுதல்.

தேசிய பூங்காக்களில் நாளொன்றுக்கு கிடைக்கும் வருமானம் ரூபா 20 மில்லியன் ஆகும். விலங்குகள் மற்றும் சுற்றாடலுக்கு தீங்குபயக்காத வகையிலும், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையிலும் இவ் வருமானத்தை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலனளித்துள்ளன. திமிங்கிலம், டொல்பின் போன்ற மீன்வகைகளைப் பார்வையிடுவதற்காக முன்னரை விட உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் ஆர்வம் காட்டுவது விசேடமானதாகும்.

பத்து இலட்சம் மலர் செய்கையாளர்கள் தற்போது இனங்காணப்பட்டுள்ளதுடன், மலர் ஏற்றுமதியின் போது பாரியளவில் வருமானமீட்ட முடிவதுடன் மலர் செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம் ஊடாகவும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் காப்பிட வனசீவராசிகள் வலையமொன்றைத் தாபித்தல், மலடாகக்கூடிய அச்சுறுத்தலுக்குள்ளாகும் அனைத்து வனவிலங்குகளையும் பாதுகாத்தல், அழிந்து போகக்கூடிய விசேட விலங்குகளைப் பாதுகாத்தல், உள்நாட்டு தாவரங்கள் மற்றும் மலர் வகைகளின் ஆய்வுகள் மாத்திரமன்றி பேணிப்பாதுகாக்கும் பணிகளை மேற்கொள்ளல், மனித வளங்கள் மற்றும் யானை வளங்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் யானை மனிதன் மோதல்களைக் கட்டுப்படுத்தல், பல தேசிய பூங்காக்களை அபிவிருத்தி செய்தல் என்பன உட்பட பல விடயங்கள் 2017 ஆண்டில் செயற்படுத்தப்பட்டன.

சுற்றாடல் பாதுகாப்புடன் சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பது என்பது இன்றைய உலகின் பாரதூரமான, சவால்மிகுந்த பிரச்சினையாக விளங்குகின்றது. கடந்த 30-40- ஆண்டகளுள் பல வகையில் சுற்றாடல் மாசடைந்ததமையினால் இன்று வரை முழு உலக மக்களும் படிப்படியாக அதன் விளைவுகளை சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். எல்லா நாடுகளும் பல்வேறு காலநிலை மாற்றங்களுக்கும், அனர்த்தங்களுக்கும், இயற்கை பாதிப்புக்களுக்கும் உள்ளாகி மக்கள் கைவிடப்பட்டிருப்பது, வலுவாதார அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படாமையினாலேயே ஆகும். ஆதலால், வலுவாதார அபிவிருத்தி எனும் விடயம் முதன்முதலில் அமைச்சொன்றின் கீழ் கொண்டு வரப்பட்ட்து எமது நாட்டிலேயாகும் என்பதும் இன்னுமொரு சிறப்பம்சமாகும்.

அதிதேகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினதும், கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினதும் ஆசியுடன் வனசீவராசி வளங்களைப் பேணிக்காத்து நீடுநிலைத்த நாடொன்றுக்காக எமது அமைச்சு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அனைவரும் அயராது பங்களிப்புக்களை வழங்கும்படி நான் வினயமாக கேட்டுக் கொள்கின்றேன்.

**சுமேதா ஜீ. ஜயசேன**

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் பிரதியமைச்சர்

## வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களான வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம், தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு நிதியம் ஆகிய அனைத்தும் இவ்வமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் ஆகும். அதன் முக்கிய பணி என்னவெனில், சுற்றாடலிலுள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி அவற்றைப் பாதுகாத்தல், பொதுமக்களுக்கு விலங்குகளினால் ஏற்படும் பாதிப்புக்களை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து, விலங்குகள் மற்றும் மனிதனிடையே சுமுகநிலையைத் தோற்றுவிப்பதுமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையினால் 2030 ஆண்டளவில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் 17 வலுவாதார குறிக்கோள்கள் மற்றும் 169 இலக்குகளையும் எய்துவதற்கு தன்னாலான முயற்சிகளை எடுக்கவேண்டியது எம்முன்னேயுள்ள பிரதான சவாலாகும். இச் சவாலை வெற்றிகொள்வதற்கு நாம் செயற்படுத்த வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொடர்ந்தேச்சையான மூலோபாயங்களை வகுத்துக் கொள்வதற்கும், அனைத்து அமைச்சுக்களும், திணைக்களும், நிறுவனங்களும் ஒருங்கிணைத்து அது தொடர்பான விழிப்பூட்டல், திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பும் இவ்வமைச்சிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே அமைச்சின் கீழ் இயங்குகின்ற மூன்று திணைக்களங்களும் எமது நாட்டுக்கு பிரதானமாக வருமானமீட்டித்தரும் திணைக்களங்களாக அமைந்துள்ளமையானது சிறப்பானதாகும். வனசீவராசிகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக உயரிய முன்னுரிமையை வழங்கி, சுற்றாடல் சுற்றுலா கைத்தொழிலை மேம்படுத்தி, தேசிய வருமானத்தை அதிகரிப்பது தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படுகின்றது.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதான பணி யானை—மனிதனிடையே சுமுகநிலையைத் தோற்றுவிப்பதாகும். அதற்கமைய செயற்படுத்தப்படுகின்ற யானை—மனிதன் மோதலை மட்டுப்படுத்தும் செயற்திட்டத்தை புதுப் பொழிவுடன் சிறப்பாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம் தாவரங்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து சுற்றுலாப்பயணிகளை கவரும் வண்ணம் மூலோபாயங்களை அறிமுகப்படுத்தியும், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் வனவிலங்குகளுக்கு வனாந்தரத்தின் உரிமையை உறுதிப்படுத்தி சுதந்திரமாக நடமாடுவதற்கு அவகாசமளிக்கும் பொருட்டு விலங்குகள் மனிதனிடையே சுமுகநிலையைத் தோற்றுவிப்பதற்காகவும், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தற்போதைய மிருகக்காட்சிசாலையினுள் விலங்குகளை கூடுகளை அடைக்கும் முறைக்கு புறம்பாக சுதந்திரமாக நடமாடுவதற்கு அவசியமான இடவசதிகளை வடிவமைத்துக் கொடுத்து அபிவிருத்தி செய்தும், வனசீவராசிகள் பொறுப்பினூடாக சுற்றாடலின் பெறுமானத்தை அதிகரித்து சமுதாய வலுப்படுத்தல் பணிகளை மேற்கொண்டுள்ளதுடன் நாட்டு மக்களுக்கு உச்ச சேவையை வழங்கும் நோக்குடன் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கும் அவர்களது பொழுது போக்கிற்காகவும் உச்சளவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் தொலைநோக்கினையும் பணிநோக்கினையும் அடைந்து கொள்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய கௌரவ காமினி ஜயவிக்ரம பெரேரா அவர்களுக்கும், தற்போது அது தொடர்பாக எப்பொழுதும் வழிகாட்டல்களையும், தலைமைத்துவத்தையும் ஆலோசனைகளையும் வழங்கிநிற்கும் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர் ரவீந்திர சமரவீரஅவர்களுக்கும், பிரதி அமைச்சர் கௌரவ சுமேதா ஜீ. ஜயசேன அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2017 ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை வடிவமைப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும், பிரிவுத் தலைவர்களுக்கும், செயலாற்ற அறிக்கையை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும், மொழிபெயர்ப்புப் பணியை செய்துதவிய மொழிபெயர்ப்பாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டக்ளஸ் நானாயக்கார**
செயலாளர்,
வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

# உள்ளடக்கம்

*பக்கம்*


- **வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு** 11

  நிர்வாகம் பிரிவு 17

  திட்டமிடல் பிரிவு 20

  அபிவிருத்திப் பிரிவு 22

  வலுவாதார அபிவிருத்திப் பிரிவு 25

  நிதிப் பிரிவு 31

  உள்ளக கணக்காய்வுப் பிரிவு 34

  சட்டப் பிரிவு 36

- **வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்** 37
- **தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்** 65
- **தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம்** 97
- **இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு** 121

# 1. வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

# வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

## 1.அமைச்சு தொடர்பான விபரம்

### 1.1. அறிமுகம்

2015 செப்தெம்பர் மாதம் 21 அந் திகதிய இல. 1933/13 ஐக் கொண்ட அதி விசேட வர்த்தமானிக்கு அமைவாக, வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தாபிக்கப்பட்டது.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கம்,

- வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள், தாவரவியற் பூங்காக்கள், மற்றும் மிருகக்காட்சிசாலைகள் ஆகிய விடயங்களுக்கு உரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை வகுத்தல், பின்னூட்டல்கள் மற்றும் மதிப்பீடு பணிகள்.
- வன விலங்குகள் மற்றும் தாவரங்களைப் பேணிப்பாதுகாக்கும் கட்டளைச் சட்டத்தை அமுல்படுத்தல்.
- தாவரவியற் பூங்காக்கள் கட்டளைச் சட்டத்தை அமுல்படுத்தல்.
- தேசிய மிருகக்காட்சிசாலைகள் சட்டத்தை அமுல்படுத்தல்
- வலுவாதார அளவீடுகள் மற்றும் சுற்றாடல் சுட்டிகளை தயாரித்தல்
- வனசீவராசி வளங்களை பாதுகாத்தல்.

### 1.2. அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

1. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
2. தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்
3. தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம்
4. இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு
5. வலுவாதார அபிவிருத்தி செயலகம் (வலுவாதார சட்டம் அங்கீரிக்கப்பட்டுள்ளது. வலுவாதார அபிவிருத்தி செயலகம் காலக்கிரமத்தில் தாபிக்கப்படும்.)

## 1.3. அமைச்சின் கீழ் இயங்குகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

### 1.3.1. புத்தளம் ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தித் திட்டம்

செயற்பாட்டுப் பிரதேசம் - புத்தளம் மாவட்டம்

செயற்பாட்டு நிறுவனம் - புத்தளம் மாவட்டச் செயலகம்

நோக்கம் -

- சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதனூடாக பிரதேச மக்களை வலுவூட்டல்
- பிரதேச உயிர்ப்பல்வகைமைகளின் பாதுகாப்பை மேம்படுத்தல்
- உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்தல்

மதிப்பீட்டுத் தொகை - ரூ.மி. **500**

செயற்திட்ட காலம் **- 2017 - 2018**

**2017** ஒதுக்கீடு **-** கூட்டிணைந்த நிதி ரூ.மி.. **2.5**

செயற்பாடுகள் -

- சமுத்திர சுற்றாடல் தொடர்பான சுவரொட்டி, வரைபடம், மாதிரி, புத்தகங்கள், தகவல், பத்திரங்களைத் தயாரித்தல்.
- சமுத்திரத்தை அண்டிய சுற்றாடல் முறைமைகளை மற்றும் சமுத்திரம் மாசடையாத வலயமொன்றாக பேணும்படி சுற்றுலாப் பயணிகளுக்கு விழிப்பூட்டக்கூடியவாறு அறிவுற்றத்தல் பதாகைகளைப் பொருத்துதல்.
- சுற்றுலாப் பயணிகள் நடமாடும் இடங்களை பொலித்தீன் பாவனையற்ற வலயமொன்றாக பேணும்படி விழிப்பூட்டக்கூடியவாறு அறிவுற்றத்தல் பதாகைகளைப் பொருத்துதல்..

பௌதீக மேம்பாடு -

- சமுத்திரத்தை அண்டிய சுற்றாடல் முறைமைகளை மற்றும் சமுத்திரம் மாசடையாத வலயமொன்றாக பேணும்படி சுற்றுலாப் பயணிகளுக்கு விழிப்பூட்டுவது தொடர்பாக வலயங்களருகே 17 பதாகைகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.(பாலாவி சந்தி, கந்தகுழிக்குத் திரும்பும் சந்தி, கற்பிட்டிய மீன்பிடி துறைமுகம், கந்தக்குழி அனுமதிச்சீட்டு கருமபீடம், முத்துபத்திய கரையோரம், பத்தலகுண்டுவ, தலவில தேவாலயம் அருகே ஆகிய பிரதேசங்களில்).
- சுற்றுலாப் பயணிகள் நடமாடும் இடங்களை பொலித்தீன் பாவனையற்ற வலயமொன்றாக பேணும்படி விழிப்பூட்டக் கூடியவாறு 09 அறிவுற்றத்தல் பதாகைகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் (கலாஓய வாடியின் குளிக்குமிடம், முள்ளிப்புரம் கரையோரம், புத்தளம் களப்புப் பூங்கா, சேருக்குழி கரையோரம், கருப்புப்பனை, இரணவில்லு கரையோரம், மாரவில சிலுவை தேவாலயம் அருகே மற்றும் உடப்பு கரையோரம் அருகே)
- விழிப்புணர்வு கையேடுளை விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 1.3.2. வடக்கு மாகாண ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தித் திட்டம்

செயற்பாட்டுப் பிரதேசம் - வடக்கு மாகாணம்

செயற்பாட்டு நிறுவனம் - யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்

நோக்கம் -

- பிரதேசத்தில் சுற்றுலா செல்வாக்கு மிக்க இடங்களை இனங்கண்டு, சுற்றாடல் சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதன் ஊடாக மக்களை வலுவூட்டல்.

மதிப்பீட்டுத் தொகை - ரூ.மி. **700**

செயற்பாட்டுக் காலம் **- 2017 - 2021**

**2017** ஒதுக்கீடு **-** கூட்டிணைந்த நிதி ரூ.மி.. **5**

செயற்பாடுகள் -

- பிரதேசத்தில் சுற்றுலாப் பணிகளை மேம்படுத்துவதற்கு உரிய செல்வாக்கு மிக்க இடங்களை இனங்காணல் மற்றும் உரிய தரவுகளைச் சேகரித்தல்.
- இனங்காணப்பட்ட பிரதேசங்களை அண்டி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.
- சுற்றாடல் வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்பூட்டல்.

பௌதீக மேம்பாடு -


- இனங்காணப்பட்ட பிரதேசங்களை அண்டிய சுற்றாடல் முறைமைகள் தொடர்பாக 03 விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும், 02 பயிற்சித்திட்டங்களை நடாத்துதல். (வேலணை , சரசாலை மற்றும் நெடுந்தீவு)
- இவ்விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் பொதுமக்கள், அரசாங்க அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரை இலக்காக கொண்டு நடாத்தப்பட்டதுடன், அதன்போது வேலணை, சங்காணை மற்றும் நாகர்கோவில் பிரதேசங்களில் இனங்காணப்பட்ட கண்டல் தாவர சுற்றாடல் முறைகள் மற்றும் சதுப்பு நிலங்கள் பற்றியும்,நெடுந்தீவில் சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குரிய இடங்களை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் குழுக்களினால் அவ்விடங்களிலுள்ள அச்சுறுத்தல்கள் பற்றியும் அவ்விடங்களின் பாதுகாப்பு பற்றியும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக தகுந்த இடங்களை இனங்காணல் மற்றும் ஆய்வுப் பணிகள் தொடர்பான உபகரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.



நெடுந்தீவில் இடம்பெற்ற விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்



மண்டந்தீவில் இடம்பெற்ற விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்


நிர்வாகம்
நிதி
திட்டமிடல்
சட்டம்
அமைச்சின் பிரிவுகள்
அபிவிருத்தி
உள்ளக கணக்காய்வு
வலுவாதார அபிவிருத்தி

## 1.4. நிர்வாகப் பிரிவு

### 1.4.1. அறிமுகம்

இவ் அமைச்சுக்குரியதான பெறுமானமிகு வளமான மனிதவளத்தை சிறந்த முறையில் முகாமைப்படுத்துவதன் ஊடாக அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்புக்கள் நிர்வாகப் பிரிவின் மூலம் வழங்கப்படுகின்றது.

### 1.4.2. பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சினது பொது நிர்வாகம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை பேணல்
- அமைச்சினது சகல அலுவலர்களதும் தாபனப் பணிகளை மேற்கொள்ளல்.
- திணைக்களத்தின் தாபனப் பணிகளை உரியவாறு மேற்கொள்வதற்கு அமைச்சினால் போதிய ஒத்துழைப்புக்களை வழங்குதல்
- பாராளுமன்ற ஆலோசனைக் குழு, பாராளுமன்ற வினாக்கள் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் ஆகியனவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- அமைச்சின் மனிதவள அபிவிருத்தி தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

### 1.4.3. 2017.12.31 ஆந் திகதியளவிலான செயலாற்றுகை

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் மற்றும் தேசிய தாவரவியற் பூங்காக்கள் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கும் உரிய பிரச்சினைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இற்கமைய 2017.12.31 ஆந் திகதியில் 126 சம்பள மாற்றக் கடிதங்களைத் தயாரித்தமை.
- **2017.12.31** ஆந் திகதியில் சம்பள ஆண்டேற்றங்களைப் பெறுவதற்கு உரித்துடைய 75 அலுவலர்களின் சம்பள ஆண்டேற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 04 ஒழுக்காற்று கோவைகளின் அலுவல்கள் இற்றைவரையாக்கப்பட்டு பேணப்பட்டமை
- நிர்வாகப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் அனைத்துவித பதிவுத் தபால் மற்றும் சாதாரண கடிதங்கள் உடனுக்குடன் உரிய நிறுவனங்களுக்கும், பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.
- அமைச்சின் 17 பதவிநிலை அலுவலர்களின் தொலைபேசிப் பட்டியல்கள், பொது தொலைபேசி பற்றுச்சீட்டுக்கள் ஆகிய இரு பற்றுச்சீட்டுக்களையும் துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
- நிர்வாகப் பிரிவின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட நூலகம் மூலம் அமைச்சின் ஆளணியினருக்கு நூல்களை வழங்கி, அவர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்துவதற்கும் வாசிப்பு திறனை விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
- குறித்த காலப்பகுதியில் எட்டு அலுவலர்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதுடன், ஒரு அலுவலர் பதவியுயர்வு பெற்றுள்ளார்.
- சுமார் 42 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் இதுவரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- கௌரவ புத்தசாசன, வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரின் வாய்மூல வினாக்களுக்கான விடைகளைக் கோரியிருந்த 19 பாராளுமன்ற வினாக்களுக்கு விடையளிக்கப்பட்டுள்ளன.

- போக்குவரத்துப் பிரிவின் மூலம் பேணப்படுகின்ற வாகனத்தொகுதியில் 11 வாகனங்கள் காணப்படுவதுடன், அவை ஊடாக இவ் அமைச்சின் அனைத்துப் பிரிவுகளுக்கும் உரிய வசதிகள் வழங்கப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக போக்குவரத்துப் பிரிவினால் 21 உத்தியோகபூர்வ வாகனங்கள் பேணப்பட்டு வருகின்றன. 03 வாகனங்கள் மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் அலுவல்கள் தொடர்பாக தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளது. 18 வாகனங்கள் அமைச்சின் பெயருக்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

### 1.4.4. மனிதவள அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகள்

பயிற்சி மற்றும் திறன்விருத்தி தொடர்பாக 2017 ஆண்டுக்கு அங்கீகாரமளிக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகை (ரூபா **1,000,000.00**) ஆவதுடன், **2017.12.31** திகதியளவில் ரூபா 499,224.00 தொகை செலவிடப்பட்டு பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பாக அமைச்சின் அலுவலர்கள் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

| | நிறுவனம் | பயிற்சியின் பெயர் | பங்களிப்பு |
|---|---|---|---|
| **1** | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் | கணனி லைசன்சியேட் சான்றிதழ் | **05** |
| **2** | தேசிய தொழிற்கல்வி நிறுவனம் | அலுவலக முகாமைத்துவத்த்ற்கான ஆங்கிலம் | **04** |
| | | சொத்து முகாமைத்துவம் | **01** |
| | | கோவையிடல் | **03** |
| **3** | வரையறுக்கப்பட்ட திறன் விருத்தி மன்றம் | ஆட்சேர்ப்பு நடைமுறை | **03** |
| | | அமைச்சரவைப் பத்திரங்கள் தயாரித்தல் | **02** |
| | | வருடாந்தபொருட்சேவை சபை | **01** |
| | | பிரத்தியேக கோவை பேணல் | **02** |
| | | தலைமைத்துவ மற்றும் ஆளுமை விருத்தி | **01** |
| | | கணனி லைசன்சியேட் சான்றிதழ் | **03** |
| | | அலுவலக உதவியாளர்களது எண்ணக்கரு விருத்தி மற்றும் தொழிற்சார் அறிவினை விருத்தி செய்தல் | **11** |
| | | திறன் முகாமைத்துவத்திற்கான மனிதவள முகாமைத்துவ விசேடத்துவம் | **01** |
| **4** | நிதிக் கற்கை நிறுவனம் | அலுவலர் சம்பளப்பட்டியல் | **04** |
| | | பெறுகைச் செயன்முறை | **01** |
| | | CIGAS செயலமர்வு | **01** |
| **5** | பொறியியலாளர் நிறுவனம் | வளிப்பதனி முறைமை மற்றும் நிதிசார் கண்காணிப்பு | **03** |
| **6** | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | பொறியியலாளர் சேவையின் III சேவை அலுவலர்களுக்கான இரண்டாம் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | **01** |
| **7** | பிரதேச செயலகம் — களனி | இரண்டாம் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | **08** |
| **8** | **PRAG** நிறுவனம் | பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல் மற்றும் வீதிச் சட்டங்கள் தொடர்பான வழிகாட்டுகைக் கோவை | **02** |

### 1.4.5. வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள்

01. திரு. எம்.எம்.எஸ்.எஸ்.பீ. யாலேகம (மேலதிகச் செயலாளர்) - வலுவாதார அபிவிருத்தி)

- **Asia Pacific Conference (Taking Collective Action to Accelerate Transformation of Official Statistics for Agenda 2030 – (2017.03.26** இருந்து **2017.06.21** வரை தாய்லாந்தில்)**Workshop for the Countries Presenting Voluntary review (VNRS) at the high level Political forum (HLPE) in 2018 (2017.12.04** இருந்து **2017.12.05)**
- **2017 Sustainable Development Transition Forum on SDG Mainstreaming and means of Implementation (2017.10.30** இருந்து **2017.11.01)**

02. .திரு. ஜீ.பீ. சப்புதந்திரி (பணிப்பாளர் - வலுவாதார அபிவிருத்தி)

- **Regional Workshop for setting Country SDG baseline and targets for water, sanitation and hugging (2017.04.18** இருந்து **2017.04.19** வரை தாய்லாந்தில்)
- **Seminar on Population Sustainable Development and poverty Reduction for Developing Countries 2017 (2017.06.07** இருந்து **2017.06.21** வரை இருந்து

03. திருமதி. ஜே.டீ. அமரதுங்க (பணிப்பாளர் - அபிவிருத்தி)

- **Development Administration and Transformation Programme (The Malaysian Experience) 2017.10.21** இருந்து **2017.10.27** மலேசியாவில்

## 1.5. திட்டமிடல் பிரிவு

### 1.5.1. அறிமுகம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களின் அபிவிருத்திப் பணிகள் இப்பிரிவின் ஊடாகவே முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கேற்ப தேசிய தேவைப்பாடுகளை இனங்கண்டு, அபிவிருத்திப் பணிகள் திட்டமிடப்படுவதுடன் அத்திட்டங்களை அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் நாடு பூராகவும் நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் அதன் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான திட்டமிடல் பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.5.2. பணிப்பொறுப்புக்கள்

- அமைச்சின் அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல்.
- செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைய அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே இணைப்புப் பணிகளை மேற்கொண்டு மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முழுமையான மேம்பாட்டை அடைந்துகொள்ளல், தகவல்களை மீளாய்வு செய்து மேம்பாட்டு மீளாய்வு அறிக்கை தயாரித்தல்
- மேம்பாட்டு மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல், திணைக்களங்களின் மேம்பாட்டு மீளாய்வுக் கூட்டங்களில் இணைந்துகொள்ளல் மற்றும் உரிய வழிகாட்டல்களை வழங்குதல்.
- இவ் அமைச்சுடன் இணைந்த திணைக்களங்களின் மூலதனச் செலவின மதிப்பீடு தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அந்நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களை கண்காணித்தலும் செயற்படுத்தலும்.
- இவ் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்திசார் முன்மொழிவுகள் தயாரிக்கும் போது ஆலோசனைகளை வழங்குவதுடன் அவற்றை நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்
- ரூபா 50 மில்லியன் தொகையை விட அதிகமான செயற்திட்டங்களின் மேம்பாடு தொடர்பாக நிதி அமைச்சுக்கும், செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டு திணைக்களத்துக்கும் அறிக்கையிடல்.
- அமைச்சின் பாதீட்டுக் குழுவின்போது வழங்கும் பொருட்டு செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை தயாரித்தல்
- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிற நிரல் அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றுக்கு அவசியமான தகவல்களை வழங்குதல்
- அமைச்சுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் இற்றைவரையாக்கல்.
- அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அதற்குரிய அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பித்தல். மற்றும் செயற்பாட்டுப் பணிகளையும் மதிப்பீட்டுப் பணிகளையும் மேற்கொள்ளல்.
- திணைக்களங்களின் விசேட நிகழ்வுகள் சம்பந்தமான தகவல்களை வாரந்தோறும் சனாதிபதி செயலகத்திற்கு அறிக்கையிடல்.
- காலாண்டு மேம்பாடு குறித்து சனாதிபதி செயலகத்திற்கு அறிக்கையிடல்.

- மாவட்டங்களில் நடாத்தப்பட வேண்டிய வனசீவராசிகள் திணைக்களங்களுக்குரியதான கூட்டங்களை ஏற்பாடு செய்தலும், ஒருங்கிணைத்தலும்
- வனதிவி மித்திரு குழுக்கள் மற்றும் அமைச்சின் இணைப்புப் பணிகள்
- புத்தளம் இணைந்த சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்திற்கும், வடக்கு இணைந்த சுற்றுலா அபிவிருத்தி திட்டத்திற்கும் உரிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான, தீர்மானங்கள் தொடர்பான தொடர் நடவடிக்கை எடுத்தல்.
- காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக உயிரிழப்புக்கள் மற்றும் ஏனைய பாதிப்புக்கள் தொடர்பாக நட்டஈடு வழங்குவதற்குத் தேவையான கொள்கைசார் தீர்மானங்களை எடுத்தல்.
- திணைக்களங்களின் நாளாந்த வருமான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தீர்மானமெடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களின் போது அவற்றைச் சமர்ப்பித்தல்.
- வடக்கு கிழக்கு மாகாணங்களின் தரிசு நில பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு உரிய அங்கத்துவத்தைப் பெறல்.
- நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களில் திணைக்களங்களை இணைத்துக் கொள்ளல்
- செயற்பாட்டு அறை தாபித்தல் பணிகள் மற்றும் தகவல்களை இற்றைவரைப்படுத்தல்.

### 1.5.3. 2017.12.31 ஆந் திகதியளவில் செயலாற்றுகை

- அமைச்சின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றின் காலாண்டு மேம்பாட்டு மீளாய்வு தொடர்பான 12 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- திணைக்களங்களினால் நடாத்தப்பட்ட மேம்பாட்டு மீளாய்வுக் கூட்டங்களில் கலந்து கொண்டு மேம்பாட்டை அதிகரித்துக் கொள்வதற்குத் தேவையான உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.
- செயற்திட்டங்களின் மேம்பாடு நிதி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- 2016 ஆண்டின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிப்பதற்குத் தேவையான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- 2017 ஆண்டின் டிசெம்பர் 30 திகதியளவில் மேம்பாடு மற்றும் 2018 ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ள பணிகள் உள்ளடங்கிய செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- சனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, பிற நிரல் அமைச்சுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றுக்கு அவசியமான தகவல்களை வழங்குதல்.
- தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துக்கு உரிய தகவல்களை வழங்கி, அவர்களுடன் இணைந்து செயலாற்றல்.
- 2018 பாதீடு தொடர்பான செயற்திட்ட அறிக்கை மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரித்தல்.
- வனசீவராசிகள், தாவரவியற் பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைகள் சம்பந்தமான பிரச்சினைகளின் போது குறித்த நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- 2018 உத்தேச செயற்திட்ட அறிக்கைக்கான அங்கீகாரத்திற்காக தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- வடக்கு மாகாண ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தினதும், புத்தளம் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தினதும் செயற்திட்ட முன்மொழிவுகள் குறித்த மாவட்டச் செயலகங்கள் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கான பணிகளும் இணைப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- செயற்பாட்டு அறை தாபித்தல் பணிகள் மற்றும் தகவல்களை இற்றைவரைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 1.6. அபிவிருத்திப் பிரிவு

### 1.6.1. அறிமுகம்

இப்பிரிவின் மூலம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திப் பணிகளை முறைசார்ந்தவாறும் விளைதிறனானவாறும் செயற்படுத்துவதற்கான இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

### 1.6.2. பணிப்பொறுப்புக்கள்

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் ஆகியனவற்றுக்கு உரியதான பணிகளை நடைமுறைப்படுத்தும் போது தேவையான கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- வனசீவராசி வளங்கள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் ஆகியன தொடர்பாக அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- சனாதிபதி செயலகத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற வனசீவராசிகள், தாவரவியற் பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைகள் ஆகிய விடயங்கள் சம்பந்தமான பொதுமக்களின் முறைப்பாடுகளை தீர்த்துவைக்கும் பொருட்டு உரிய நிறுவனங்களுக்கு அனுப்புதல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவரவியற் பூங்காக்கள் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் ஆகியனவற்றுக்கு சொந்தமான காணிகள், தொல்பொருளியல் காப்பிடங்கள் என்பனவற்றை அண்டியதாகக் காணப்படுகின்ற பிரச்சினைகள், காப்பிடங்களில் வசிக்கின்ற மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் ஆகியனவற்றுக்கு சொந்தமான காணிகளை சுவீகரித்தல், எதிர்ப்புக்கள் தொடர்பாக விசாரணை செய்தல் மற்றும் புதிய சுவீகரிப்பு பிரேரணைகளை அனுப்புவது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உரிய காணிகள் சம்பந்தமான கோரிக்கைகள், மாற்றல்கள் மற்றும் பிரச்சினைகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்துக்குரிய காணிகளை அண்டிய அத்துமீறிய குடியேற்றங்களை நிறுத்தி, அவர்களுக்கு மாற்றுக் காணிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தனியார் தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு காணிகள் சம்பந்தமாக அவதானிப்புக்களை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.
- தேசிய வனப்பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் தேசிய மிருகக்காட்சிசாலைகள் ஆகியனவற்றினுள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள், விலங்குகளுக்கான வைத்தியசாலைகள் நிர்மாணித்தல், மின்வேலிகள் அமைத்தல், காட்டு யானைகள் தங்கும் நிலையம் நிர்மாணித்தல், வாழ்விடங்களை வளப்படுத்தல் ஆகிய பணிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகள்.
- அபிவிருத்தி விடயத்துக்கு உரிய அமைச்சரவைத் தீர்மானத்தை கண்காணித்தல்
- வனசீவராசிகள், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சிசாலைகள் ஆகியவற்றின் அலுவல்களுக்கு ஏற்றவாறு இவ் அமைச்சின் விடயப் பணிகள் குறித்து வேறு அமைச்சுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான அவதானிப்புக்களை சமர்ப்பித்தல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்படும் மின்வேலிகள் சம்பந்தமான பணிகள் மற்றும் மின்வேலிகளை நிர்மாணிப்பது ஆகியன தொடர்பான பிரச்சினைகளை ஆராய்தல்.
- அபயபூமி எல்லைகளை மீள குறியிடுவதற்கான பணிகள்.
- நன்கு பழக்கப்பட்ட யானைக் குட்டிகள் மற்றும் பிற வனசீவராசி விலங்குகள் சம்பந்தமான கோரிக்கைகள் பற்றிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- சமய நிகழ்வுகளில் நன்கு பழக்கப்பட்ட யானைகளையும், கொம்பன் யானைகளையும் வழங்குவதை முறைசார்ந்த வகையில் மேற்கொள்ளல் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகளை எடுத்தல்.

- மக்களுக்கு தொந்தரவு செய்யும் விலங்கின பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆய்வு மற்றும் அதற்கான சிபார்சுகளை வழங்குதல்
- யானைகளின் பாதுகாப்பு சம்பந்தமான பணிகள்
- சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.
- இலங்கையில் மலர் செய்கை மேம்படுத்துவது தொடர்பாக போதிய பரந்துபட்ட திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு உரிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றுதல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் ஆகிய மூன்று திணைக்களங்களுக்கும் உரிய சுற்றுலா மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான பணிகளை முன்னெடுத்தல்.
- இடர் முகாமைத்துவ திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் 2014 - 2018. அச் செயற்திட்டத்தை அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தல் கடல்வாழ் முலையூட்டிகள் சம்பந்தமான பாதுகாப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளல்.
- கடல்வாழ் முளையூட்டிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள்
- மஹஎலிய, நாயகஹ சிறு நீர் மின் அனல்நிலையம்—ஹோர்ட்டன்தென்ன செயற்திட்டம் மற்றும் கடற் தாவரங்கள் என்பனவற்றைப் பாதுகாப்பதற்கான செயற்திட்டப் பணிகள்
- புதிய உத்தேச அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளல், மதிப்பிடல் மற்றும் சிபார்சு பெற்றுக் கொள்ளல்.
- பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பாராளுமன்ற வினாக்களின் பகுப்பாய்வு சுருக்கம்.
- கௌரவ அமைச்சர் கலந்து கொள்ளும் மாவட்ட செயலமர்வுகள் மற்றும் சுற்றுலாக்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ளல் மற்றும் அச் சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகளை முன்னளித்தல் மற்றும் உரிய தொடர் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் விலங்கின பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுத்தல்.
- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளல் மற்றும் போதிய ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுத்தல்.
- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் மூலம் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாணிப்புக்களின் அடிப்படைத் திட்டங்களுக்குரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல்.
- கழிவகற்றும் இடங்களில் காட்டு யானை நடமாட்டத்தை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வனசீவராசிகள் திணைக்களம் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து பணிகளை ஒருங்கிணைத்தல்.
- வனசீவராசிகள் மற்றும் பிற காப்பிடப் பகுதிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- திணைக்களம் குறித்து எழும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளுமுகமாக கௌரவ அமைச்சரின் ஆலோசனைக்கமைய குழுக்களை நியமித்தலும் ஒருங்கிணைத்தலும்.

### 1.6.3. 2017.12.31 ஆந் திகதியளவில் செயலாற்றுகை

- வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பில் கிடைத்த **24** பொதுமக்கள் முறைப்பாடுகள் பற்றி விசாரிப்பதற்காக அந்த முறைப்பாடுகள் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டதுடன் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- சனாதிபதி செயலகத்திற்குக் கிடைக்கப் பெற்ற வனசீவராசிகள், தாவரவியல் பூங்காக்கள், மிருகக்காட்சிசாலைகள் போன்ற விடயங்கள் சம்பந்தமான 33 முறைப்பாடுகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, அது தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அது தொடர்பாக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- பிரதமரின் அலுவலகத்தினால் கிடைக்கப் பெற்ற வனசீவராசிகள், தாவரவியல் பூங்காக்கள், மிருகக்காட்சிசாலைகள் போன்ற விடயங்கள் சம்பந்தமான பொதுமக்களின் 06 முறைப்பாடுகள் தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு, அது தொடர்பாக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துக்கு உரிய காணிகள் சம்பந்தமாக வெளியார் மற்றும் நிறுவனங்களிடையே நிலவுகின்ற 06 பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.
- தேசிய பூங்காக்களில் வாவிகளை மறுசீரமைப்பது தொடர்பாக கமநல திணைக்களத்துடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக வனசீவராசிகள் திணைக்களத்தின் பூங்காக்களின் வாவிகளை மறுசீரமைப்பதற்கான பணிகளுக்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளத
- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உரிய சந்தர்ப்பங்களில் அமைச்சினால் ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.
- வனசீவராசிகள் பாதுகாப்பு விடயம் சம்பந்தமான 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், பிற அமைச்சுக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட 02 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்துக்கு உரிய பின்னவளை புதிய மிருகக்காட்சிசாலை மற்றும் யானைகள் சரணாலயம் என்பவற்றை விஸ்தரிப்பது சம்பந்தமாக சுவீகரிக்கப்பட்ட காணிகளை உறுதிபட இனங்காணல் மற்றும் சுவீகரிப்பதற்கு முடியாதுள்ள காணிகளை உறுதிப்படுத்தல்
- தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்துக்கு உரிய பின்னவளை புதிய மிருகக்காட்சிசாலை மற்றும் யானைகள் சரணாலயம் என்வற்றை விஸ்தரிப்பதற்காக காணி சுவீகரிப்புச் செயற்பாட்டில் புதிய 4 சுவீகரிப்புப் பிரேரணைகள் காணி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், 09 எதிர்ப்பு விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு சிபார்சுக்கள் காணி அமைச்சுக்கு அனுப்புவதற்கு உதிதேசிக்கப்பட்டுள்ளது.
- நீர் வளங்கள் முகாமைத்துவ பணிகள் தொடர்பாக குறித்த நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் மற்றும் கள விசாரணைகளில் கலந்து கொள்ளல்
- வனசீவராசிகள் பாதுகாப்பு, வனப் பூங்காக்கள் மற்றும் தாவரவியல் பூங்காக்கள் சம்பந்தமான பொதுப் பணிகளில் ஈடுபடல்
- தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் விசேட விலங்கினங்களை பிடித்துக் கொள்வதற்காக, வனசீவராசிகள் திணைக்களத்துக்கு போதிய அனுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- மூங்கில் பூங்காவொன்றை தாபிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை ஒருங்கினைத்தலும் கண்காணித்தலும்
- ரஜரட்ட நவோதய— சனாதிபதி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து உரிய சந்தர்ப்பங்களில் அமைச்சின் ஒத்துழைப்பினை வழங்குதல்.
- நன்கு பழக்கப்பட்ட யானைகளும், கொம்பன் யானைகளும் தொடர்பான சட்டதிட்டங்களையும் , தகுவிதிகளையும் தயாரித்து அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மூலம் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல்.
- யானைகள் தொடர்பான கோரிக்கைகள் மாவட்டங்களுக்கு அமைய வெவ்வேறாக இனங்காணப்பட்டுள்ளதுடன், யானைகளை பெற்றுக்கொள்ள முடியுமான இடம் / ஆட்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கோரிக்கை விடுக்கப்பட்ட ஆட்கள் மற்றும் இடங்ளை சம்பந்தமான தகவல்களைத் திரட்டுதல்

## 1.7. வலுவாதார அபிவிருத்திப் பிரிவு

### 1.7.1. அறிமுகம்

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தாபிக்கப்பட்டதன் மூலம் இந்நாட்டில் வலுவாதார அபிவிருத்தித் தேவைப்பாடுகள் மற்றும் தகுவிதிகள் என்பனவற்றை ஒருங்கிணைப்பதற்கான அரியதோர் சந்தர்ப்பம் கிட்டியது எனலாம்.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் பிரதான பணிநோக்கு, சம்பிரதாய அணுகுமுறைகள், அமைச்சுக்கள் / நிறுவகப் பொறிமுறை, பங்காளர்களின் பரந்துபட்ட ஒத்துழைப்புக்களுடனான சுற்றாடல் சமூக பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய அபிவிருத்திசார் சவால்களை கையாள்வதற்கான கொள்கைகள், மூலோபாயங்கள், பொறிமுறைகள் மற்றும் திட்டமிடல் ஆகியன தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகளை முன்னெடுத்தல் ஆகும்.

வலுவாதார அபிவிருத்தி தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை (SDG's) தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக ஒருங்கிணைத்தல் மற்றும் வசதியளித்தல் என்பனவற்றை கேந்திரமாகக் கொண்ட தேசிய மட்டத்திலான நிறுவனமாக விளங்குவது, வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சாகும்.

வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சில் வலுவாதார அபிவிருத்திப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையின் வலுவாதார அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கான கொள்கை ரீதியானதும் தாபன ரீதியானதுமான சட்டகம், மூலோபாயம், செயற்திட்டம் என்பன தொடர்பாக தேசிய வலுவாதார அபிவிருத்தி திட்டமொன்றைத் தயாரிக்கும் பணிகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன.

### 1.7.2. பணிப்பொறுப்புக்கள்

• போதிய வலுவாதார அபிவிருத்தி கொள்கைகள், மூலோபாயங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், பொறிமுறைகள், முறையியல்கள் என்பனவற்றைத் தயாரிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குவது உள்ளடங்கலாக வலுவாதார அபிவிருத்தி செயற்பாடுகளில் தலையிட்டு கேந்திர நிறுவகமாக பணியாற்றல்.

• வலுவாதார அபிவிருத்திக்கான தேசிய கொள்கைகளை செயலுருப்படுத்துவதற்குத் தேவையான முன்னுரிமைகளை இனங்காணல் மற்றும் பொறிமுறைகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு தேசிய மட்டத்திலும், அதற்கு கீழ் மட்டத்திலும் உரிய நிறுவகங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றல்.

• வலுவாதார அபிவிருத்தியுடன் இணைந்த ஆய்வுகள் தொடர்பாக வசதியளித்தல் மற்றும் அவ் ஆய்வுப் பெறுபேறு, கொள்கை மறுசீரமைப்பு மற்றும் செயலுருப்படுத்துதல்.

• வலுவாதார அபிவிருத்தி 2030 நிகழ்ச்சி நிரல் மற்றும் வலுவாதார அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான தேசிய, சர்வதேச பங்களிப்புக்கள் குறித்த கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல் உள்ளடங்கலாக வசதியளித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

## 1.7.3. 2017.12.31 ஆந் திகதியளவில் செயலாற்றுகை

### 1.7.3.1. விழிப்புணர்வூட்டல் செயலமர்வுகள்

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் | திகதி | இடம் | பங்களிப்பு | நோக்கம் |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கையில் வலுவாதார இலக்குகளை செயலுருப் படுத்துவது தொடர்பான சவால்ளை, கொள்கைகள், உத்திகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்ளை தொடர்பான ஆலோசனை செயலமர்வு | 2017.02.16 | செத்சிறிபாய 11 ஆம் கட்டம், கேட்போர்கூடம் | இலங்கையில் வலுவாதார அபிவிருத்தி நோக்கங்களை செயலுருப்படுத்துவது தொடர்பாக நிறுவன ஒருங்கிணைப்பு தொடர்பாக பெயரிடப்பட்ட பிரதான கேந்திர அலுவலர்கள் (Focal Point Officers), அனைத்து மாவட்ட பணிப்பாளர்கள் (திட்டமிடல் / மாகாண மட்ட அனைத்து பிரதி பிரதான செயலாளர்கள் | இலங்கையின் வலுவாதாரா அபிவிருத்தி நோக்கங்களை செலுருபடுத்துமுகமாக நிறுவக ஒருங்கிணைப்பு தொடர்பாக கலந்துரையாடல் |
| 02. | SDG 14 தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் | 2017.05.25 / **2017.05.26** | Club Palm Bay Marawila ஹோட்டல் | ஐக்கிய நாடுகள் சமுத்திர மாநாட்டிற்கு இலங்கை இத்தறையின் தலையீடுகளை சமர்ப்பிப்பது தொடர்பாக ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிணயிப்பின் கீழ் SDG 14 சம்பந்தமாக (வலுவாதார அபிவிருத்தியின் பொருட்டு சமுத்திர, கடல்சார் பயன்பாடுகள் சம்பநதமாக) அனைத்து பங்குதார நிறுவனங்களும் | SDG 14 நடைமுறைப்படுத்துவதற்கு ஆற்ற வேண்டிய பணிகள் மற்றும் அவற்றை நிறைவேற்ற வேண்டிய நிறுவனங்களை |
| 03 | வலுவாதார அபிவிருத்தி தொடர்பான மூலோபாய திட்டங்களைத் தயாரிக்கும் செயலமர்வு | 2017.08.29 | பத்தரமுல்லை Water's Edge | திணைக்களத் தலைவர்கள் | வலுவாதார அபிவிருத்தி குறிக்கோள்களை இலங்கையில் செயற்படுத்தும் போது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பிரதான பங்காளர்களை இனங்காணல் மற்றும் இவ் அபிவிருத்தி இலக்கின்போது இலங்கையில் செயலாற்ற வேண்டிய விதம் பற்றி இணக்கப்பாடுகளை மேற்கொள்ளல் |
| 04. | "“பரிணாம தேசிய மயமாக்கல்” எனும் தொனிப் பொருளைக் கொண்ட இரண்டாவது வலுவாதார அபிவிருத்திசார் மாகாண மண்டபம் | 2017.08.31 | குருனாகலை Blue Sky ஹோட்டல் | வட கிழக்கு மாகாண மாகாண சபையின் உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன அலுவலர்கள், அனைத்து அரசாங்க சிரேஷ்ட அலுவலர்கள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட திட்டமிடல்சார் அலுவலர்கள், பல்கலைக்கழகங்களில் வலுவாதார அபிவிருத்தி பாடத்துக்குரிய விரிவுரையாளர்கள், வணிகசபை முகவர்கள், மற்றும் வலுவாதார அபிவிருத்தி தொடர்பாக பணியாற்றும் சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் | வடகிழக்கு மாகாண வலுவாதார அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
அதற்கு மேலதிகமாக திணைக்கள அலுவலர்களினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

## 2.4.13. தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தைப் பேணல்,

**நிதி மேம்பாடு**

| | |
|---|---|
| **மதிப்பிடப்பட்டதொகை** | **- ரூ.மி. 9.58** |
| **செலவு** | **- ரூ.மி 9.38** |

**பௌதீக மேம்பாடு**

- திணைக்களத்தின் உள்ளக ஆட்சேர்ப்பின் கீழ் புதிய 33 வனசீவராசிகள் கண்காணிப்பாளர்கள் தொடர்பாக வனசீவராசிகள் முகாமைத்துவம் சம்பந்தமான புகுமுக பயிற்சி பாடநெறி மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு சிரேஷ்ட முகாமைத்துவ சான்றிதழ் X பாடநெறி 26 அலுவலர்கள் தொடர்பாக கிரிதலே தேசிய வனசீவராசிகள் ஆய்வு மற்றும் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்டது.
- வனசீவராசிகள் பாதுகாப்பு சிரேஷ்ட முகாமைத்துவ சான்றிதழ் XI பாடநெறி 25 அலுவலர்கள் தொடர்பாக நடத்தப்பட்டது.
- பறவைகள் தொடர்பாக ஆவணப்பட நிகழ்ச்சித்திட்டமொன்று படம்பிடிக்கப்பட்டது.



தேசிய வனசீவராசிகள் ஆய்வு மற்றும் பயிற்சி நிலையம்—கிரிதலே

## 2.5. பிற நிறுவனங்களின் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள்

### 2.5.1. மொரகஹகந்தை செயற்திட்டத்தின் வனசீவராசி பாதுகாப்புப் பணிகள்

**நோக்கம்**

1. களுகங்கை மற்றும் உத்தேச மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை அண்டிய தூண்டல் வலயமொன்றை பிரகடனப்படுத்தல் மற்றும் அங்கு மனித நடமாட்டங்களை குறைத்தல்.
2. மேற்படி பிரதேசத்தில் யானை — மனிதன் பிரச்சினையை குறைப்பதற்காக வனசீவராசி தடைகளை அமைத்தல் ( மின் வேலிகள், அகழிகள் தோண்டல்)
3. வனசீவராசிகள் மோதலைக் குறைப்பதற்காக விஸ்தரிக்கப்படவுள்ள பிரதேசத்தில் வனசீவராசி வாழ்விடங்களை மேம்படுத்தல்
4. செயற்திட்ட பிரதேசத்தை அண்டியுள்ள வனசீவராசி ஒதுக்கிடங்களில் சுற்றாடல் சுற்றுலாத்துறையை மேம்படுத்தல்
5. செயற்திட்ட பிரதேசத்தை அண்டியுள்ள வனசீவராசி ஒதுக்கிடங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்

**நிதி மேம்பாடு**

**மதிப்பிடப்பட்டதொகை - ரூ.மி. 52.10**

**செலவு - ரூ.மி 41.86**

**பௌதீக மேம்பாடு**

- வஸ்கமுவ தேசிய பூங்காவின் பாதை இரு மருங்கிலும் 24 கி.மீ. நெடுகிலும் படர்த்தாவரங்கள் அகற்றப்பட்டுள்ளன.
- வஸ்கமுவ தேசிய பூங்காவின் வில்மிட்டியவிலிருந்து சங்சாப்பிட்டிய வரையிலான பாதை திருத்த வேலைகள் நிறைவடைந்துள்ளன.
- வஸ்கமுவ தேசிய பூங்காவின் யுத்தகனாவ எம்பேயில் இருந்து மகாவலி பீட்டு வரையிலான பாதை திருத்த வேலைகள் நிறைவடைந்துள்ளன.
- கவுடுல்ல தேசிய பூங்காவின் பாதை இரு மருங்கிலும் 15 கி.மீ. நெடுகிலும் படர்த்தாவரங்கள் அகற்றப்பட்டுள்ளன.
- சோமாவதி தேசிய பூங்காவில் 01 சப்பாத்துப் பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- சோமாவதி தேசிய பூங்காவில் பெருவில மற்றும் புப்பில்விலும் புதிய 02 பீட்டு அலுவலகங்கள் நிர்மாணிக்கப்பட்டன.
- 60 வனசீவராசி அலுவலர்களுக்கு 02 தமிழ்மொழிப் பாடநெறி சிறப்பாக நடாத்தப்பட்டுள்ளன.
- கட்டுகெலியாவ, பட்டுஓய பீட்டு அலுவலகம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- அங்கம்மெடில்ல தே.பூ. 01 விடுதி மற்றும் தகவல் நிலையம் திருத்தியமைக்கப்பட்டது
- பனிஜசஜஓய பீட்டு அலுவலகம், சோமாவதி தேசிய பூங்காவினுள் சுற்றுலாப் பணிகளை மேம்படுத்துவது தொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
- மின்னேரிய தேசிய பூங்காவில் புதி யசுற்றுலா விடுதியொன்றை நிர்மாணிக்கப்பட்டது
- கங்காதார இயற்கை காப்பிடத்தின் 12 கி.மீ. நீள எல்லைக் குறியிடல் பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன..
- வஸ்கமுவ தே. பூ படர்தாவரங்களை அகற்றுதல் மற்றும் கவுடுல்ல தே. பூ. Slasher மூலம் புற்தரை முகாமைத்துவம் (70ஹெ.)மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- கிரிதலை தேசிய வனசீவராசிகள் மற்றும் பயிற்சி நிலையத்தின் பங்களாவுக்குச் செல்லும் பாதை திருத்தப்படுகின்றது

## 2.5.2. சுற்றாடல் முறைமைகள்சார் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம்

உலக வங்கியின் உதவியுடன் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்திட்டம் (ESCAMP) 2017-2021 வரை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனபரிபாலன திணைக்களம் ஆகியவற்றின் மூலம் செயற்படுத்தப்படுவதுடன் அது தொடர்பாக 45 அ.டொ. ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட காப்பிட பிரதேசங்களின் உள்ளே மற்றும் வெளியே தரைவழி, கடல்வழி மற்றும் ஈரநில சுற்றாடல் முறைமை முகாமைத்துவ பாதுகாப்பு செயற்பாடுகளை அதிகரிப்பதே இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் 2017 ஆண்டில் பின்வரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் செயற்திட்ட கூறுகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. .

- **ஆக்கக்கூறு 2a**

வனசீவராசிகள் காப்பிட பிரதேசங்களுக்கு அருகேயுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் (6 அ.டொ.)

| பணிகள் | மதிப்பீடு – 2017(ரூ.மி.) | நிதிசார் மேம்பாடு | பௌதீக மேம்பாடு |
|---|---|---|---|
| புத்தள தே.பூ. அருகேயுள்ள கிராமங்களின் மக்களுக்கு 05 நுண் திட்டங்கள் தயாரித்தல் | 2.1 | 0.95 | • 05 நுண் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>• சமுதாய உப செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் கோன்வலான மற்றும் நெதிகம்வில பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>• தெற்கு வனசீவராசிகள் வலயத்திற்குப் புறம்பான வலயங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள வனசீவராசிகள் அலுவலரை சமுதாய செயற்பாடுகள் தொடர்பாக உணர்வுபூர்வமாக ஈடுபடுவதற்கான 01 நிகழ்ச்சித்திட்டம் |

- **ஆக்கக்கூறு 2b**

யானை -மனிதன் நல்லுறவினூடே யானைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை மட்டுப்படுத்தல் (11அ.டொ.)

| பணிகள் | மதிப்பீடு – 2017(ரூ.மி.) | நிதிசார் மேம்பாடு | பௌதீக மேம்பாடு |
|---|---|---|---|
| காட்டு யானைகளின் எண்ணிக்கை | 5 | - | 02 செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. (1%) |
| காட்டு யானைகளின் நடமாட்டத்தை அவதானித்தல் | 25 | - | இனங்காணப்பட்ட 40 காட்டு யானைகளுக்கு கழுத்துப்பட்டி கொள்வனவு செய்வதற்கு பெறுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (10%) |
| லுணுகம்வெஹர தே.பூங்காவில் காட்டு யானை நடமாட்ட பூங்கா நிர்மாணித்தல் | 150 | - | மதிப்பீடு தயாரிக்கபட்டு வருகின்றது (3%) |

- **ஆக்கக்கூறு 3a**

வனசீவராசிகள் காப்பிடப் பிரதேச பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் (11.6 அ.டொ.)

| பணிகள் | மதிப்பீடு – 2017(ரூ.மி.) | நிதிசார் மேம்பா | பௌதீக மேம்பாடு |
|---|---|---|---|
| யால தே. பூ. மூலங்களை மேம்படுத்தல் | 50 | | 12 சிறு வாவிகள், 04 கல்கெம், 07 கொன்கிறீட் நீர் குழிகள் தொடர்பாக பெறுகை நடவடிக்கைகள் |
| வனசீவராசிகள் பிரதேசங்களின் குற்றங்களைத் தடுப்பது தொடர்பாக SMART patrolling முறையைக் கையாளல் | 5 | 8.99 | ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் களப் பயிற்சிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. சுற்றி வளைப்பு அலகு (Patrolling units) தொடர்பாக தரவுகள் சேகரிக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. |
| வனசீவராசிகள் பாதுகாப்புப் பிரதேசங்களின் முகாமைத்துவம் தொடர்பாக உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தலும், | 20 | | செயற்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்படுகின்றன. (1%) |

- **ஆக்கக்கூறு 3b**

வனசீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்களின் சுற்றாடல் சுற்றுலா பணிகளை மேம்படுத்தல் (06 அ.டொ.மில்லியன்)

| பணிகள் | மதிப்பீடு – 2017 | நிதிசார் மேம்பாடு | பௌதீக மேம்பாடு |
|---|---|---|---|
| யால மற்றும் புத்தள தே.பூ. சுற்றாடல் சுற்றுலா பணிகளின் அபிவிருத்தி | 22.0. | | செயற்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்படுகின்றது (1%) |

- **ஆக்கக்கூறு 3c**

நிறுவக இயலளவு மற்றும் முதலீட்டுத் திறன்விருத்தி (6.6 அ.டொ.மில்லியன்)

| பணிகள் | மதிப்பீடு – 2017 (ரூ.மி.) | நிதிசார் மேம் பாடு | பௌதீக மேம்பாடு |
| --- | --- | --- | --- |
| கிரிதலை தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் | **40** | - | தொழிநுட்ப ஆலோசகர்களைத் தெரிவ செய்து பெறுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (50%) |
| வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ டிப்ளோமா பாடநெறி | **8.0** | **11.48** | கிரிதலை தேசிய கிரிதலை தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் ஆறு மாதகால டிப்ளோமா பயிற்சி இடம்பெற்று வருகின்றது.**(60%)** |
| திணைக்கள அலுவலர்கள் தொடர்பாக ஐந்து ஆண்டுகால பயிற்சித் திட்டமொன்றினைத் தயாரித்தல் | - | - | பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. **(100%)** |
| WILDLANKA ஆராய்ச்சி மாநாடு | **2.5** | **1.85** | **2017** ஆண்டின் ஆராய்சி மாநாடு 2017.08.15 மற்றும் 16 ஆந் திகதிகளில் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடாத்தப்பட்டது. **(100%)** |
| நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களின் இயலளவு விருத்தி (பயிற்சி, உபகரணங்கள் மற்றும் வாகன) | **4.0.** | - | 05 டபிள்கெப் கொள்வனவு செய்யப்பட்டன. **(100%)** அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |
| **மொத்தம்** | **50.5** | **22.71** | |

## 2.6. 2017.12.31 ஆண்டிற்கான செலவு (அந்தந்த விடயங்களுக்கு அமைய)

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடு (ரூ.மி.) | மேம்பாடு | |
|---|---|---|---|---|
| | | | நிதி (ரூ.மி.) | % |
| 1 | சுற்றாடல் சுற்றுலாத்துறை அபிவிருத்தி | 7 | 5.93 | 85% |
| 2 | மக்கள் தொடர்பாடல் பணிகளின் அபிவிருத்தி | 3.20 | 3.10 | 97% |
| 3 | அச்சுறுத்தலுக்காளான அரியவகை விலங்கினப் பாதுகாப்பு | 2 | 0.01 | 1% |
| 4 | தகவல் தொடர்பாடல் முறைமை மேம்பாடு | 4.8 | 1.40 | 29% |
| 5 | கட்டிட மறுசீரமைப்பு | 18 | 14.72 | 82% |
| 6 | கட்டிட நிர்மாணிப்பு | 25 | 10.55 | 42% |
| 7 | தளபாடங்கள், அலுவலக உபகரணங்களின் கொள்வனவு | 5.85 | 5.83 | 100% |
| 8 | இயந்திரப்பொறித் தொகுதி கொள்வனவு | 9.5 | 7.15 | 75% |
| 9 | இயந்திரப்பொறித் திருத்தம் | 5 | 3.20 | 64% |
| 10 | வாகனங்களின் திருத்த வேலைகள் | 10 | 9.77 | 98% |
| 11 | காப்பிட பிரதேசங்களின் எல்லைகளை குறியிடல் | 20 | 15.76 | 79% |
| 12 | பயிற்சி மற்றும் ஆராய்ச்சி அலுவல்கள் | 2.5 | 2.50 | 100% |
| 13 | பாதுகாப்பு கற்கை மற்றும் விவரணம் | 6.2 | 6.12 | 99% |
| 14 | பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் | 6.3 | 6.25 | 99% |
| 15 | தேசிய வனசீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கேந்திர நிலைய பேணல் | 9.6 | 9.38 | 98% |
| 16 | உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி | 10 | 2.13 | 21% |
| 17 | காப்பிட பிரதேச வீதி முறைமைகளை மறுசீரமைத்தலும்,அபிவிருத்தி செய்தலும் | 40 | 36.66 | 92% |
| 18 | காப்பிட பிரதேச வதிவிட வளப்படுத்தல் | 100 | 77.56 | 78% |
| 19 | மின்வேலி நிர்மாணிப்பு | 100 | 99.95 | 100% |
| 20 | காட்டு யானை மனிதன் மோதலைக் கட்டுப்படுத்தல் | 373.85 | 344.71 | 92% |
| மொத்தம் | | 758.8 | 662.69 | 87% |

## 2.6.1. 2017 ஆண்டின் டிசெம்பர் 31 வரையிலான செலவினப் பொழிப்பு

| செலவு வகுதி | 2017 மதிப்பீடு (ரூ.மி) | 2017 செலவு (ரூ.மி.) | நிதி மேம்பாடு (%) |
|---|---|---|---|
| மூலதனச் செலவு | **758.8** | **662.69** | **87** |
| மண்டுவரும் செலவு | **1,116.65** | 1,113.68 | **100** |
| மொத்தம் | **1,875.45** | **1,776.37** | **95** |

## 2.6.2. 2017 ஆண்டின் டிசெம்பர் 31 வரையிலான செலவினப் பொழிப்பு

| செலவு வகுதி | 2017 மதிப்பீடு (ரூ.மி) | 2017 செலவு (ரூ.மி.) | நிதி மேம்பாடு (%) |
|---|---|---|---|
| வன சீவராசிகள் பாதுகாப்பு நிதியம் | **1,205.73** | **943.14** | **78** |

## 2.6.3. 2017 ஆண்டின் வனவிலங்கு பாதுகாப்பு நிதிய செலவினப் பொழிப்பு

| செலவின தலைப்பு | விபரம் | மதிப்பீடு (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) | நிதி மேம்பாடு (%) |
|---|---|---|---|---|
| 3000 | தன்னார்வ வழிகாட்டிப் படி | 80 | 72.67 | 91 |
| 3001 | உள்ளபடியான ஊழியர் படி | 12 | 9.44 | 79 |
| 3002 | **பிரயாணச் செலவினம்** | 28 | 23.40 | 84 |
| 3003 | எரிபொருள் | 48 | 40.06 | 83 |
| 3005 | ம படி ( நீதிமன்ற தண்டப்பண பெறுவனவுகளில் இருந்து) | 16 | 11.98 | 75 |
| 3006 | இறந்த காட்டு யானைகளை அப்புறப்படுத்தல்/ புதைத்தல்/ எரியூட்டல் | 1.5 | 0.93 | 62 |
| 3007 | மக்களுக்கு விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்களுக்கானகொடுப்பனவு | 12 | 11.37 | 95 |
| 3008 | யானை வெடி கொள்வனவு | 71 | 69.55 | 98 |
| 3009 | யானை துரத்துதல் | 10 | 6.39 | 64 |
| 3010 | விலங்குகளுக்கான உணவுச் செலவினம் | 85 | 60.37 | 71 |
| 3011 | சேவைக் கட்டணங்கள் | 300 | 245.80 | 82 |
| 3012 | வாகனங்களின் திருத்த வேலைகள் | 32 | 31.90 | 100 |
| 3013 | மின்சாரம் மற்றும் நீர் | 11 | 8.77 | 80 |
| 3014 | துப்பாக்கி அனுமதிப்பத்திர கொடுப்பனவு | 0.18 | 0.18 | 99 |
| 3015 | மலடாகக்கூடிய அச்சுறுத்தலுள்ள அரியவகை உயிரின பாதுகாப்பு | 10 | 4.84 | 48 |
| 3016 | வானொலி செய்திகளுக்கான கொடுப்பனவுகள் | 4 | 3.77 | 94 |
| 3017 | பங்களாக்களின் திரைச்சீலை | 1.5 | 0.99 | 66 |
| 3018 | வழக்கறிஞர் கட்டணங்கள் | 0.5 | 0.37 | 73 |
| 3019 | நானாவித செலவினம் | 10 | 9.49 | 95 |
| 3020 | **பொறித் தொகுதி, மின்னுபகரணம், கட்டிட பராமரிப்புச் செலவினம்**<br>• காப்பிட பகுதிகளில் அமைந்துள்ள 21 நிர்வாக கட்டிடங்கள்<br>• 03 உத்தியோகபூர்வ விடுதிகள்,<br>• 07 மலசலகூட முறைமைகள்<br>07 வனசீவராசிகள் சுற்றுலா விடுதிகளின் திருத்த வேலைபன் முடிவுறுத்தப்பட்டுள்ளன.<br>• அதற்கு மேலதிகமாக காப்பிட பகுதிகளில் அமைந்துள்ள தேசியப் பூங்காக்களில் 2 நுழைவுகள், 01 நீர் வழங்கல் முறைமை, 94 மின்விநியோக முறைமைகள் என்பவற்றின் திருத்த வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. | 85 | 78.53 | 92 |

| செலவு தலைப்பு | விபரம் | மதிப்பீடு (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) | நிதி மேம்பாடு (%) |
|---|---|---|---|---|
| 3021 | செயற்பாட்டுப் பொருட்கள் மற்றும் கருவுகள் (வைத்திய) | 8 | 6.43 | 80 |
| 3022 | காகிதாதிகள் மற்றும் அலுவலகச் செலவு | 4 | 2.82 | 70 |
| 3023 | அலுவலர்களின் வைத்தியசாலை மற்றும் வைத்திய கட்டணம் | 1 | 0 | 0 |
| 3024 | அலுவலர்களின் உயிரிழப்பு மற்றும் உடற்காயங்களுக்கான இழப்பீடு | 1 | 0.58 | 58 |
| 3028 | சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை வழங்குவதுடன் வனசீவராசிகள் பூங்காக்களிலும் வசதிகளை மேம்படுத்தல்<br>• குமன மற்றும் லகுகல தேசிய பூங்காக்களில் 02 சுற்றுலா விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன.<br>• உடவளவை யானைகள் காப்பகத்தில் 02 கட்டிடங்களின் நிர்மாணிப்பு வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.<br>• காப்பிடப் பகுதிகளில் அமைந்துள்ள 03 விடுதிகளின் நிர்மாணிப்பு வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன<br>• லுணுகம்வெஹர தேசிய பூங்காவினுள் 01 வாகன தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.<br>• உடவளவை, யால மற்றும் கல்ஓயா தே.பூ. மலசலகூட முறைமைகள் 03 தாபிக்கப்பட்டுள்ளன.<br>• புறா தீவில் தேசிய பூங்காவிந்கான அலுவலக வசதிகளை அதிகரிப்பது தொடர்பாக சுற்றாடலுக்கு நலன்பயக்கும் (DURA House) வகையிலான 02 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன<br>• காப்பிட பிரசேத்தில் 05 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.<br>• யலி புபுதமு 15 சசப்பிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யால தே.பூ. வலய இல. IIIIV மற்றும் V 30 கி.மீ பாதை நிர்மாணித்தல்,40 சப்பாத்துப் பாலங்கள், நீர்மூலம், யால தே.பூங்காவின், யால பூங்காவின் பிரதான நுழைவாயில் மற்றும் 01 மலசலகூடம், 92 வாவிகள், 01 வனசீவராசிகள் சுற்றுலா விடுதி நிர்மாணித்தல் ஆகிய பணிகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக நுழைவுக் கட்டிடம், நுழைவுச்சீட்டு கருமபீடம் என்பன நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.<br>• கடலாமைகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல் தொடர்பாக ஊரணி, ரெக்கவ, உடமஹல ஆகிய இடங்களில் 06 பாதுகாப்பு அலகுளை நிர்மாணிக்கப்பட்டன. | 160 | 91.26 | 57 |
| 3029 | படகு, வாகனம் மற்றும் பொறிமுறை கொள்வனவு செய்தல் | 7.5 | 5.45 | 73 |
| 3030 | சுற்றுலா பங்களா மற்றும் தேசிய பூங்கா பேணல் | 8.5 | 5.71 | 67 |
| 3034 | வெளிநாட்டுப் பயிற்சி | 44.6 | 41.22 | 92 |
| 3036 | ஊக்குவிப்புப் படி | 64.5 | 56.04 | 87 |
| 3037 | மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் | 6.5 | 6.41 | 99 |
| 3038 | பங்களிப்புத் தொகை | 0 | 0 | 0 |
| 3039 | பிரதான அலுவலகத்தின் வசதிகளை மேம்படுத்தல் | 15 | 5.36 | 36 |

| செலவு தலைப்பு | விபரம் | மதிப்பீடு (ரூ.மி.) | செலவினம் (ரூ.மி.) | நிதி மேம்பாடு (%) |
|---|---|---|---|---|
| 3040 | மக்கள் தொடர்பாடல் பணிகள்<br><br>• கிராமிய மக்களுக்காக 03 வனசீவராசிகள் பாதுகாப்பு குறித்து 03 எண்ணக்கரு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் 2 நிகழ்ச்சித்திட்டங்கள், 2 சிரமதான நிகழ்ச்சித் திட்டங்கள், ஹொரவபொத்தானை வருமானமீட்டல் நிகழ்ச்சித்திட்டம் 01, புத்தளம் வனசீவராசிகள் வலயத்தில் மக்களை அடிப்படையாக கொண்ட நுண் திட்டங்களைத் தயாரிக்கும் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கல்வேஸ்லேன்ட் தேசிய பூங்கா அருகேயுள்ள சனசமுக நிலையத்தை திருத்த்யமைத்தல் மற்றும் கல்ஓயா தேசி.பூ. அருகேயுள்ள முன்பள்ளிக்காக கட்டிடமொன்றை நிர்மாணித்து அதன் | 4 | 3.85 | 96 |
| 3041 | கடற் பாதுகாப்பு<br><br>• கடல்வாழ் உயிரினங்களை பாதுகாப்பது தொட்டர்பாக பல்வேறு தரப்பினரையும் விழிப்பூட்டும் 20 நிகழ்ச்சித் | 19.15 | 1.54 | 8 |
| 3042 | வாழ்விட வளமாக்கல்<br><br>• 330ஹெக். படர்தாவரங்கள் மற்றும் புல் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.<br><br>• 02 வாவிகள் திருத்தப்படுகின்றன.<br><br>• 03. நீர் விநியோக முறைமைகளை தாபிப்பதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | 44.3 | 25.66 | 58 |
| | **மொத்தம்** | **1,205.73** | **943.14** | **78** |



**யால தேசிய பூங்கா தலைமையகத்தின் நுழைவு கருமபீடம் நிர்மாணித்தல்**



**யால வனசீவராசிகள் சுற்றுலா பங்களா நிர்மாணித்தல்**

## 2.7. . 2017 ஆண்டில் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட விசேடசேவைகள்

- வனசீவராசிகள் காப்பிட வலையமைப்பினுள் நிலவுகின்ற குற்றங்களை தடுப்பதற்காக 1,048 சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வனவிலங்கு மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சட்டத்தை அமுல்படுத்தி ரூபா 34.86 மில்லியன் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

- **2017** ஆண்டில் யானை—மனிதன் மோதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பின்வருமாறு யானை வெடிகள் கொள்வனவு செய்யப்பட்டு, காட்டுயானைகளின் அச்சுறுத்தல் நிலவுகின்ற பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

| யானைவெடி வகை | தொகை | செலவு (ரூ. மி.) |
|---|---|---|
| வெடி (பெரிய) | **360,000** | **27.61** |
| வெடி (சிறிய) | **150,000** | **10.02** |
| சமிக்ஞை | **225,000** | **31.63** |
| **மொத்தம்** | **735,000** | **69.26** |

- புதிய திருத்தப்பட்ட காட்டு யானை இழப்பீட்டுத் திட்டம் தொடர்பான அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுட்டன், அதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நட்டஈட்டுக் கொடுப்பனவு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

| இழப்பீட்டு வகை | முன்யை இழப்பீட்டுத்திட்டதின் கீழான இழப்பீட்டுத் தொகை (ரூ.) | புதிய இழப்பீட்டுத்திட்டதின் கீழான இழப்பீட்டுத் தொகை (ரூ.) |
|---|---|---|
| உயிரிழப்புக்கள் | **200,000** | **500,000** |
| உடற்காயங்கள் | | |
| முழுமையாக பலவீனநிலை | **200,000** | **500,000** |
| அரைவாசி பலவீனநிலை | **75,000** | **75,000** |
| சொத்து இழப்புக்கள் | **100,000** | **100,000** |

- **WILDLANKA** சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில், 2017 ஆண்டின் ஆகஸ்ட் மாதம் 15 மற்றும் 16 ஆகிய இரு தினங்களில் தாஜ் சமுத்திரா ஹோட்டலில், “ காலநிலை மாற்றங்கள் மற்றும் பாதுகாப்பு” எனும் தொனிப்பொருளின் கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பெருந்தொகையான ஆராய்ச்சியாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.



# 3. தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

## தொலைநோக்கு

**"உலகின் மிகச் சிறந்த மிருகக்காட்சிசாலையைப் பேணுகின்ற நிறுவனமாகத் திகழ்தல்"**

## பணிநோக்கு

**"நவீன மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவின் கீழ், கண்கவர் சிற்பமுறைகள், தேர்ச்சிமுறைமைகளினூடாகவும் அங்கீகரிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் அதிகூடிய பாதுகாப்புடனான இருப்பிடங்களை வழங்கி, பல்வகைமைத் தன்மையுடன் கூடிய ஆரோக்கியமாக விலங்கினங்களை கூட்டாக காட்சிப்படுத்தல்"**

## பிரதான குறிக்கோள்கள்

- பாதுகாப்பு
- இனப்பெருக்கம்
- கல்வி
- ஆராய்ச்சி
- காட்சிப்படுத்தல்

# 3. தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம்

## 3.1. அறிமுகம்

வன விலங்குகளை பிடித்து வெளிநாட்டு மிருகக் காட்சிசாலைகளுக்கு அனுப்பும் வரை தரித்து வைத்திருப்பதற்கான தனியார் வனவிலங்கு சேகரிப்பிடமாக 1920 ஆண்டிற்கு முன்னர் இம் மிருகக்காட்சிசாலை தாபிக்கப்பட்டது. தெஹிவல பிரதேசத்தில் ஏறத்தாழ 11 ஏக்கர் அளவிலான நிலப்பரப்பில் ஜெர்மனி நாட்டவரான திரு. ஜோன் ஹாகென்பர்க் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தெஹிவளை மிருகக்காட்சிசாலை 1936 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆந் திகதி அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.

அதன் பின்னர் இம் மிருகக்காட்சிசாலை 1946 ஆம் ஆண்டு சுயாதீன அரசாங்க திணைக்களமான மாற்றம் பெற்றதுடன் மிருகக்காட்சிசாலையின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவப் பணிகள் 1982 ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் கீழ் தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் பின்னவல மிருகக்காட்சிசாலைகளின் இலங்கை வலயம், ரிதியகம சபாரி பூங்கா உட்பட கோனபொல மிருகக்காட்சிசாலையும் நிர்வகிக்கப்படுகின்றது.

## 3.2. பணியாட்தொகுயினரின் விபரம்

2017.12.31தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்கென அங்கீகாரமளிக்கப்பட்ட பணியாட்தொகுதி 882 ஆவதுடன் அன்றைய திகதியளவில் சேவையிலுள்ள பணியாட்தொகுதியினரின் எண்ணிக்கை 695 ஆகும்.

*வகைப்படுத்தலுக்கு அமைய 2017.12.31 இல் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதி மற்றும் அத்திகதியளவில் சேவையிலுள்ள பணியாட்தொகுதியினர*

| வகைப்படுத்தல் | | 2017.12.31 திகதியளவில் பணியாட்தொகுதியினர் | |
|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்ட | சேவையிலுள்ள |
| 1 | சிரேஷ்ட மட்டம் | 29 | 24 |
| 2 | மூன்றாம்நிலை மட்டம் | 02 | 01 |
| 3 | இரண்டாம் நிலை மட்டம் | 230 | 166 |
| 4 | ஆரம்ப மட்டம் | 621 | 504 |
| **மொத்தம்** | | **882** | **695** |

தேசிய மிருகக்காசிசாலைகள் திணைக்களத்தின் 2017 ஆண்டின் பல்வேறு பதவிகள் தொடர்பாக 105 பணியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்

| *2017 புதிய ஆட்சேர்ப்பு* | | |
|---|---|---|
| **தொடரிலக்கம்** | **பதவி** | **ஆட்சேர்க்கப்பட்ட எண்ணிக்கை** |
| 1 | யானை பராமரிப்பாளர் | 10 |
| 2 | விலங்கு பொறுப்பாளர் | 24 |
| 3 | ட்ரக்டர் இயக்குநர் | 2 |
| 4 | சங்கிலி இரம்ப இயக்குநர் | 2 |
| 5 | நீர்ப் பம்பி இயக்குநர் | 1 |
| 6 | சாரதி உதவியாளர் | 4 |
| 7 | பாதுகாப்பு மேற்பார்வையாளர் | 8 |
| 8 | பூங்கா தொழிலாளி | 23 |
| 9 | தொழிலாளி | 31 |
| **மொத்தம்** | | **105** |

## 3.3.செயற்பாட்டு அலகு

### 3.3.1. பிரதான அலுவலகம்

**2017** ஜூலை மாதம் 27 ஆந் திகதியில் இருந்து தெஹிவளை மிருகக்காட்சிசாலையினுள் அமைந்திருந்த பிரதான அலுவலகம் கேள்விகோரல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 251/1 ஏ, 251/2பீ, கொழும்பு வீதி, வத்தே கெதர சந்தி, மஹரகம எனும் முகவரியில் அமைந்துள்ள கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் நாயகம் உட்பட திணைக்களத்தின் நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகத்திற்குரிய சிரேஷ்ட மட்டத்திலான 08 அலுவலர்களும் மூன்றாம் நிலை மட்டத்திலுள்ள 01 அலுவலரும், 41 பணியாட்தொகுதியினரும் பிரதான அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

### 3.3.2. தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை



திரு.ஜோன்ஹாகென்பர்க்என்பரால்தனியார்வனவிலங்குசேகரிப்பிடமாக1920 களின்நடுப்பபகுதியில் சுமார் 11 ஏக்கர்அளவிலானநிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டது. அது 1936ஆம்ஆண்டில்அரசாங்கத்தினால்பொறுப்பேற்கப்பட்டதுடன் தற்போது 23 ஏக்கர்நிலப்பரப்பில்வியாபித்துக்காணப்படுகின்றது.

உள்நாட்டு, வெளிநாட்டு பாலூட்டிகள், பறவையினங்கள், ஊர்வன மற்றும் மீனிவகை ஆகியவற்றைக் கொண்டதும், கல்விசார் பெறுமானமிக்கதுமான விலங்கினங்கள் தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் கூட்டாக காட்சிப்படுத்துப்படுகின்றது.

தெஹிவளை மிருகக்காட்சிசாலையை 2017 ஆண்டில் பார்வையிட வருகை தந்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை **1,360,566**ஆகும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை **27,626** ஆகும். அதற்கமைய, முழு மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை **1,388,192** ஆகும்.

### 3.3.3. பின்னவல யானைகள் சரணாலயம்



பின்னவல யானைகள் சரணாலயம் 1975 ஆம் ஆண்டு இரம்புக்கனை பின்னவளையில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அநாதரவாக விடப்பட்டு இருந்த ஐந்து (05) யானைகளை பராமரிப்பதற்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1982 ஆம் ஆண்டில் பின்னவல யானைகள் சரணாலயம் தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

85 யானைகளும் கொம்பன் யானைகளும் (யானைகள் சரணாலயத்திற்கு மாத்திரம் சொந்தமான 69 யானைகளும் கொம்பன் யானைகளும் மற்றும் நீதிமன்ற கட்டளைக்கு அமைய தடுத்துவைக்கப்பட்டுள்ள 16 உட்பட)2017 ஆண்டிறுதியில் பின்னவல யானைகள் சரணாலயத்திற்கு சொந்தமாயின. பின்னவல யானைகள் சரணாலயத்தில் ஆரம்பத்தில் இருந்து இதுவரை, 70 யானைக் குட்டிகள் பிறந்துள்ளன. 2017 ஆண்டில் புதிய பிறப்புக்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை..

### 3.3.4. பின்னவல மிருகக்காட்சிசாலை



பின்னவளை யானைகள் சரணாலயத்தைப் பார்வையிட வருபவர்களைக் கவரும் வகையிலும், திறந்தவெளி மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவினை பார்வையாளர்களுக்கு வழங்கக்கூடியவாறும் 54 ஏக்கர் நிலப்பரப்பில் திறந்தவெளி மிருகக்காட்சிசாலையாக பின்னவல மிருகக்காட்சிசாலையை ஆரம்பிக்கப்பட்டது. இதில் கூடுகளோ சிறிய விலங்கு ஆரணியங்களோ இன்றி சுதந்திரமாக விலங்குகள் நடமாடக்கூடியவாறு இடவசதியுடன் கூடியதாகவும், பார்வையாளர்களுக்கு கூடிய அவதானிப்பு வசதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு இலங்கை சிறுத்தைகள் ஆரணியம், கலப்பு மானின் ஆரணியம், முதலை ஆரணியம் ஆகிய விலங்கு ஆரணியங்களின் நிர்மாணிப்புப் பணிகள் முடிவுறுத்தப்பட்டு காட்சிப்படுத்துவதற்காக திருத்தப்பட்டுள்ளது. காட்சிப்படுத்தல் பணிகள் 2015.04.17 ஆந் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

பின்னவல மிருகக்காட்சிசாலையை 2017 ஆண்டில் பார்வையிட வருகை தந்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை **253,266** ஆகும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை **1,559** ஆகும். அதற்கமைய, முழு மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை **254,825** ஆகும்.

### 3.3.5. ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா



புதிய மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவினை அடிப்படையாக கொண்டு 500 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் சபாரி பூங்காவின் முதலாவது கட்டம் 2016 மார்ச் மாதம் 28 ஆந் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிங்க வலயம், உலக விலங்கு வலயம் மற்றும் ஆசியா யானைகள் வலயம் என்பன முதற்கட்டமாக மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டன.ஆபிரிக்க தாவரவுண்ணிகள் வலயம், வங்காளவேங்கை வலயம், ஆசியா விலங்கு வலயம், இலங்கை சிறுத்தை வலயம், அவுஸ்திரேலியா வலயம், சீட்டா விலங்குகளைக் கொண்ட வலயம் மற்றும் சிப்பஞ்சி வலயம் என்பனவும் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக பறவைகள், பூனையினத்தைச் சேர்ந்த சின்னஞ்சிறு மிருகங்கள், விசேட வகை குரங்குகள், சிறிய தாவரவுண்ணிகளைக் கொண்ட 35 ஏக்கர் நிலப்பரப்பினைக கொண்ட சிறு விலங்கு ஆரணியமும், 10 ஏக்கர் நிலப்பரப்பில் ஊர்வன பூங்கா மற்றும் 10 ஏக்கர் நிலப்பரப்பில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட விலங்குகளின் பாதுகாப்பு நிலையமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

### 3.3.6. விலங்குணவு வழங்கும் கோனபொல விவசாய பண்ணை



தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையில் உள்ள தாவரவுண்ணிகளுக்கு புதிய, ஊட்டச்சத்துக்கள் கொண்ட உணவுகளில் ஒரு பகுதியை வழங்குவதற்காக இப் பண்ணை 1997 ஆண்டில் ஹொரணை கோனபொல பிரதேசத்தில் 16 ஏக்கர் பரப்பில் தாபிக்கப்பட்டது. 2017 ஆண்டில் ரூபா 4.62 மில்லியன் பெறுமதியான விலங்குணவுப் பொருட்கள் இப் பண்ணையில் இருந்து தெஹிவளை மிருக்கக்காட்சிசாலைக்கு வழங்கப்பட்டது.

மிருகக்காட்சிசாலை குறித்த குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் பொருட்டு மிகவும் பயனுறுதி வாய்ந்த முறையில் கோனபொல விவசாய பண்ணையின் பங்களிப்பினைப் பெற்றுக் கொண்டு விலங்குகள் பாதுகாப்பு நிலையமும், விலங்கு தொற்றுநோய் தடுப்பு பகுதியும் இங்கு நிர்மாணிக்கப்படவுள்ளது.

## 3.4. மொத்த விலங்குகள்

தேசிய மிருககக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் பிரதான குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் நோக்குடன், தற்போது உலகில் மலடாகி வரும் அச்சுறுத்தலுக்குள்ளாகும் விலங்குகளைப் பாதுகாக்கும் பொருட்டு 2017.12.31 ஆந் திகதியளவில் 250 விசேட விலங்கினங்களுக்குரிய 4902 விலங்குகளுக்கு வாழ்விடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் ஒவ்வொரு செயற்பாட்டு அலகுகளினதும் கீழ் 2017.12.31 திகதியளவில் வாழ்விடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்ட மொத்த விலங்குகள் தொடர்பான சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக சுதந்திரமாக நடமாடும் வண்ணாத்திப்பூச்சிகள் மற்றும் பிற விசேட අපෘෂ්ඨවංශී மற்றும் சுதந்திரமாக வாழ்கின்ற விசேட பறவையினங்களையும் இப் பூங்காவினுள் கண்டு களிக்கலாம்

| விலங்குகளின் வகை | | விசேட / குடும்ப | விலங்குகளின் தொகை |
|---|---|---|---|
| **தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை** | | | |
| 1 | பாலூட்டிகள் | **65** | **301** |
| 2 | பறவைகள் | **79** | **582** |
| 3 | ஊர்வன | **36** | **198** |
| **4** | மீன் மற்றும் பிற கடல்வாழ் உயிரினம் | **68** | **3151** |
| **மொத்தம்** | | **248** | **4232** |
| **பின்னவளை யானைகள் சரணாலயம்** | | | |
| **1** | பாலூட்டிகள் – ஆசியா வலயம் | **01** | **85** |
| **மொத்தம்** | | **01** | **85** |
| **பின்னவளை மிருகக்காட்சிசாலை** | | | |
| 1 | பாலூட்டிகள் | **13** | **146** |
| 2 | பறவைகள் | **08** | **35** |
| 3 | ஊர்வன | **03** | **09** |
| **மொத்தம்** | | **24** | **190** |
| **ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா** | | | |
| 1 | பாலூட்டிகள் | **30** | **266** |
| 2 | பறவைகள் | **10** | **27** |
| 3 | ஊர்வன | **02** | **09** |
| **மொத்தம்** | | **42** | **302** |
| **கோனபொல பண்ணை** | | | |
| 1 | பாலூட்டிகள் | **01** | **02** |
| 2 | பறவைகள் | **09** | **91** |
| **மொத்தம்** | | **10** | **93** |
| தே.மி.திணை. மொத்த விலங்குகள் | | **325** | **4902** |

## 3.5. 2017ஆண்டின் விலங்குப் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம்

மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்துக்கு விலங்குகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரதான வழியாக அமைவது விலங்குகளைப் பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதேயாகும். இதன் மூலம் திணைக்களத்திலுள்ள விசேட விலங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்து, புதிய மரபணுக்களை சேகரித்து இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படுத்தி ஆரோக்கியமான மிருக பரம்பரையொன்றை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

**2017** இறக்குமதி செய்யப்பட்ட விலங்குகள் தொடர்பான குறிப்பு பின்வரும் அட்டவணையில் அடங்குகின்றன.

## 3.6. கல்வி, ஆராய்ச்சி மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

மாற்றுப் பாதுகாப்பு நிலையமாக தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் பல்வேறு கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி வருவதுடன், விலங்குகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும், விசேட விலங்குகள் குறித்தும் பல்வேறு தகவல்களை மக்களுக்கு வழங்கி நிற்கின்றது. மேலும் ஒவ்வொரு செயற்பாட்டு நிறுவனங்கள் மூலமும் 2017 ஆண்டில் பல்வேறுபட்ட சிறப்பம்சங்களுடன் இந்நாட்டு சிறார்களின் கல்வியறிவை வளர்க்கக்கூடியதான நிகழ்ச்சிகளும், பொழுதுபோக்கு வசதிகளும் வழங்கப்பட்டன.

2017ஆண்டில் ஒவ்வொரு செயற்பாட்டு நிறுவனங்களின் மூலமும் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விசார் மற்றும் பிற விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3.6.1. தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலை

### 3.6.1.1. கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

| 2017 ஆண்டின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் – தெஹிவளை மிருகக்காட்சிசாலை | | | |
|---|---|---|---|
| *தொ. இல.* | *கல்விசார் நிகழ்ச்சித்திட்ட வகை* | *செயற்பாடு* | *செயற்பாடு எண்ணிக்கை* |
| 1 | விரிவுரைகள் | பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பான விரிவுரைகள் (பொரளை ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி) | 02 |
| | | பாடசாலை செயற்திட்டங்கள் குறித்த விழிப்பூட்டல் | 117 |
| | | களச் சுற்றுலா– அலுவலர்கள் தொடர்பாக (நக்கீல்ஸ் மற்றும் வஸ்கமுவ வனப்பூங்காவை அண்டிய) | 01 |
| | | அலுவலர்கள் தொடர்பான விரிவுரைகள் | 18 |
| | | பாடசாலை மாணவர்களுக்கான கல்வி நிக.திட்டங்கள் (வெளி) | 49 |
| | | வெளியார் கோரிக்கைகளுக்கு அமைய நடாத்தப்பட்ட விரிவுரைகள் (பாடசாலை, வைத்தியசாலை, பிரதேச செயலகம், வனசீவராசி நிறுவனங்கள்) | 08 |
| | | வெளியார் கோரிக்கைகளுக்கு அமைய மிருகக்காட்சிசாலையினுள் நடாத்தப்பட்ட விரிவுரைகள் (பாடசாலை, பல்கலைக்கழகங்கள், விமானப்படை, பாரம்பரிய வைத்தியர்கள்) | 21 |
| 2 | நிறுவன பயிற்சி | பல்கலைக்கழக மாணவர்கள் (சப்ரகமுவ, ￼ரீ ஜயவர்த்தனபுர, ஊவா வெல்லஸ்ஸ) | 7 |
| 3 | பல்கலைக்கழக செய.தி. | பல்கலைக்கழக மாணவர்கள் (கொழும்பு, களனி, ருஹுனு) | 4 |
| 4 | வழிகாட்டல் நிக.திட்டங்கள் | பாடசாலை, பல்கலைக்கழகம், பிற குழுக்கள். | 51 |
| 5 | தன்னார்வ ஊழியர்கள் | உள்நாடு - வெளிநாடு | 07- 02 |
| 6 | நடமாடும் கண்காட்சி அலகு | கண்காட்சிகள் | 23 |
| 7 | விவரண நிகழ். திட்டம் | பார்வையாளர்கள் தொடர்பாக | 117 |
| 8 | கல்விசார் பதாகைகள் | பெயர்ப் பதாகைகள் | 185 |
| | | விபரங்களடங்கிய பதாகைகள் | 67 |
| 9 | செயலமர்வுகள் | பொரளை ஆயுர்வேதபைல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக, மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களம் | 2 |

### 3.6.1.2. சிறப்பம்சங்கள் மற்றும் விசேட தினக் கொண்டாட்டங்கள்

- தமிழ் சிங்கள புத்தாண்டு தொடர்பாக யானைகள், கொம்பன் யானைகளின் தலையில் எண்ணெய் தோய்க்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு.
- 2017 ஒக்ரோபர் 01 உலக சிறுவர் தினம் தொடர்பாக பிள்ளைகளுக்கு கல்வி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தியமை.
- 2017 செப்தெம்பர் 21 ஆந் திகதியில் இருந்து வெ ள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 – 10 வரை தெஹிவளை மிருகக்க்காட்சிசாலையை பார்வையிடுவதற்காக திறந்திருத்தல்.
- உயிர்ப்பல்வகைமை தின கொண்டாட்டம்

### 3.6.2. பின்னவல யானைகள் சரணாலயம்

### 3.6.2.1. கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

**2017**ஆம் ஆண்டில் பின்னவல யானைகள் சரணாலயத்தினால், பல்வேறு கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் யானைகள், கொம்பன் யானைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும், யானைகள், கொம்பன் யானைகள் குறித்தும் பல்வேறு தகவல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. அந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| ***2017ஆண்டின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் – பின்னவல யானைகள் சரணாலயம்*** | | | |
|---|---|---|---|
| ***தொ. இல.*** | ***கல்விசார் நிகழ்ச்சித்திட்ட வகை*** | ***செயற்பாடு*** | ***செயற்பாடு எண்ணிக்கை*** |
| **1** | விரிவுரைகள் | பல்கலைக்கழக மாணவர்களுக்கான விரிவுரைகள் | **06** |
| | | பாடசாலை செயற்திட்டங்கள் குறித்த விழிப்பூட்டல் | **12** |
| | | பாடசாலை மாணவர்களுக்கான கல்விசார் நிக.திட்டங்கள் | **34** |
| | | முன்பள்ளி சிறுவர்களுக்கான கல்விசார் நிக.திட்டங்கள் | **01** |
| | | அலுவலர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ். திட்டங்கள் (டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுத்தல், மலேரியா காய்ச்சல் மற்றும் அது பரவும் அபாயம்) | **02** |
| | | வெளிநாட்டு பார்வையாளர்களுக்கான விழிப்பூட்டல் நி/தி. | **12** |
| | | வெளிநாட்டவர்களுக்கான விழிப்பூட்டல் நி/தி. | **47** |
| **2** | வெளிநாட்டவர் களுக்கான விழிப்பூட்டல் நி/தி. | சிரேஷ்ட யானை பராமரிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | **01** |
| | | ஆரம்பமட்ட ஊழியர்களுக்கான தமிழ்மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | **03** |
| **3** | தன்னார்வ ஊழியர் நி.தி. | தன்னார்வ ஊழியர்கள் கலந்துகொள்ளல் | **51** |
| **4** | கண்காட்சிகள் | கண்காட்சிகளில் கலந்துகொள்ளல் | **05** |
| **5** | கால்நடை வைத்திய பிரிவினால் வெளித்தரப்பின ருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்ட ங்கள் | உள்ளுறைவாளர்களுக்கான வைத்திய பயிற்சிகள் | **04** |
| | | உள்நாட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி (வடகிழக்கு, பேராதனை) | **06** |
| | | வெளிநாட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி (றோயல் கால்நடை வைத்தியக் கல்லூரி – இலண்டன்) | **01** |

## 3.6.2.2. ஆய்வுகள்

யானைகளின் எழும்புமுறிவு தொடர்பான முகாமைத்துவம்.**(Elephant fracture Management)**

## 3.6.2.3. சிறப்பம்சங்கள் மற்றும் விசேட தினக் கொண்டாட்டங்கள்

- 2017பெப்ரவரி 16 ஆந் திகதி பின்னவல யானைகள் சரணாலயத்தின்42 ஆவது ஆண்டுவிழாவின் நிமித்தம் “குஞ்சநாதம் 2017 ” எனும் விசேட நிகழ்வுவொன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.
- 2017 ஜூன் 05 ஆந் திகதி உலக சுற்றாடல் தினம் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கான கல்விசார் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டமை மற்றும் மரநடுகை நிகழ்ச்சத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டமை.
- 2017ஆகஸ்ட் 12 ஆந் திகதி உலக யானைகள் தினம் தொடர்பாக யானைகள், கொம்பன் யானைகளது முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சத்திட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.

- 2017 ஒக்ரோபர் 01 ஆந் திகதி உலக சிறுவர் தினம் தொடர்பாக கல்விசார் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை.
- தமிழ் சிங்கள புத்தாண்டு தொடர்பாக யானைகள், கொம்பன் யானைகளின் தலையில் எண்ணெய் தோய்க்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு.
- அலுவலர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பாகதொடர்பாக,சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்.

அனைத்து ஆளணியினருக்குமான வைத்திய முகமை ஒன்றை ஏற்பாடு செய்தமை.

அலுவலர் திறன்களை வெளிக் கொணரும் நிகழ்ச்சித்திட்டங்கள் பிற, பெரஹர விழாக்களில் யானைகளை பயிற்றுவித்தல் மற்றும் கலந்துகொள்ளச் செய்வித்தல்.

### 3.6.3. பின்னவல மிருகக்காட்சிசாலை

### 3.6.3.1. கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

2017ஆண்டில் பின்னவல மிருகக்காட்சிசாலையினால் பல்வேறுபட்ட கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு தன்னாலான முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

*2017ஆண்டின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் – பின்னவல மிருகக்காட்சிசாலை*

| *தொ. இல.* | *கல்விசார் நிகழ்ச்சித் திட்ட வகை* | *செயற்பாடு* | *செயற்பாடு எண்ணிக் கை* |
|---|---|---|---|
| 1 | விரிவுரை கள் | பாடசாலை மாணவர்களுக்கான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் | 01 |
| | | சாரணழய மாணவர்களுக்கான கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் | 01 |
| | | விரிவுரைகள் (நிறுவனத்திற்கு வெளியே) | 03 |
| | | அலுவலர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் (உயிர்ப்பல்வகைமை முறைமைகள் பற்றிய விழிப்பூட்டல்கள்) | 01 |
| 2 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்க ள் | அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (தாவரங்களை கத்தரித்தல், சிகிச்சை மற்றும் பேணல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், அறிவு முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு, இறந்த மிருகங்களுக்குப் பதிலாக அவ்வெற்றிடத்தை நிரப்புதல், எழும்புத் தொகுதியை ஒழுங்குபடுத்தும் ஆடிப்படைப் பயிற்சி, வாகன – பொறியும் பொறித்தொகுதியும் தொடர்பான நிர்வாகம், புதிய CIGAS நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பயிற்சி பாடநெறி, 'வரிக்குதிரைகளை கையாளல்,TRAINING PROGRAMME ON METADATA PORTAL FOR THE TECHNICAL LEVEL OFFICERS, சிரேஷ்ட யானை பராமரிப்பாளருகளுக்கான இரண்டாவது பயிற்சி பாடநெறி, வதிவிடமற்ற இரண்டாவது மொழி (தமிழ்) பயிற்சிப் பாடநெறி, களஞ்சிய முகாமைத்துவம், கொள்வனவுச் செயன்முறை, KEEPER TALK பற்றிய ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்) | 19 |
| 3ொ | மீளாய்வு | தாவரங்கள் தொடர்பான தகவல்களை பொது மக்களுக்கு வழங்க வேண்டிய விதம் பற்றி மீளாய்வு மேற்கொள்ளல் | 01 |

### 3.6.3.2. சிறப்பம்சங்கள் மற்றும் விசேட தினக் கொண்டாட்டங்கள்

2017 ஒக்ரோபர் 10 ஆந் திகதி தொடர்பாக சிறுவர்களுக்கு கல்வி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 3.6.4. ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா

### 3.6.4.1. கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை வாழ் மக்களுக்கு தேசிய சுற்றுலா அனுபவங்களை வழங்குவதோடு மாத்திரமன்றி, ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா அதன் பணிப்பொறுப்புக்களை திறம்பட முன்னெடுப்பதற்கு அவசியமான கல்விசார் மற்றும் பயிற்சித்திட்டங்களை நடாத்துவது குறித்தும் 2017 ஆண்டில் அவதானஞ் செலுத்தப்பட்டது.

| *2017ஆண்டின் கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் – ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா* | | | |
|---|---|---|---|
| *தொ. இல.* | *கல்விசார் நிகழ்ச்சித்திட்ட வகை* | *செயற்பாடு* | *செயற்பாடு எண்ணிக்கை* |
| 1 | விரிவுரைகள் | சுற்றுலா வழிகாட்டிகளுக்கான கல்விசார் நிகழ்ச்சித்திட்டம். | 01 |
| 2 | செயலமர்வுகள் | 2016 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சபாரி பூங்காவின் விலங்குகள பொறுப்பாளர் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் தொடர்பாக ஆறு மாதகால Spoken English பாடநெறி, சபாரி பூங்காவின் விலங்குகள் பொறுப்பாளர்கள் தொடர்பாக விசேட பாம்புகள் தொடர்பான உயர் கல்வி. | 02 |

### 3.6.4.2. சிறப்பம்சங்கள் மற்றும் விசேட தினக் கொண்டாட்டங்கள்

- **2017.01.01** ஆந் திகதி பிரித் நிகழ்வு நடாத்தப்பட்டமை
- 2017.01.08 ஆந் திகதி சனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து இரு ஆண்டுகள் பூர்த்தியானமையை முன்னிட்டு சீன மக்கள் குடியரசின் வனப் பாதுகாப்பு பிரதியமைச்சர் திரு சென் பெங்பு அவர்கள் மற்றும் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் கௌரவ அமைச்சர் காமினி ஜயவிக்ரம ஆகியோரினால் சிறுவர் பூங்கா மற்றும்12 அலகுகளைக் கொண்ட கிராமிய உற்பத்தி விற்பளை கட்டிடத் தொகுதியொன்று தொடர்பாக அடிக்கல் நடல்.
- **2017.03.27** அன்றைய தினம் சபாரி பூங்கா திறந்து வைக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியானதனை முன்னிட்டு இரவு முழுவதும் தர்ம போதனை மற்றும் அடுத்த நாள் 15 பிக்குமார்களுக்கு அதிகாலை தானம் வழங்கல்.

அதற்கு மேலதிகமாக, 2017 ஆண்டில் பல்வேறு வெளி நிறுவனங்களூடாக திணைக்களத்தின் ஆளணியினருக்கு வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| *2017ஆண்டின் பணியட்தொகுதி – உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்* | | | |
|---|---|---|---|
| *தொ. இல.* | *பயிற்சி பாடநெறி* | *பயிற்சியளித்த நிறுவனம்* | *கலந்து கொண்டோர்* |
| 01 | விசேட அனுபங்களை பரிமாறிக் கொள்ளும் செயலமர்வு | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 01 |
| 02 | சொத்து முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்) | APFA | 02 |
| 03 | அறிவு முகாமைத்துவம் பற்றிய ஒரு நாள் செயலமர்வு | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 09 |
| 04 | Diploma in Public Procurement & Contract Admini-stration | மிலோதா நிறுவனம் | 01 |
| 05 | வாகனங்கள், பொறியும் பொறித்தொகுதியும் நிர்வாகம் | தேசிய தொழிற்கல்வி நிறுவனம் | 05 |
| 06 | ஆங்கில மொழி தொடர்பான சான்றிதழ் பாடநெறி (Certificate Course in English language) | SDFL | 04 |
| 07 | நிர்வாக அலுவலர்களுக்கான உற்பத்தித்திறன் எண்ணக்கரு பயிற்சி பாடநெறி | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 01 |
| 08 | பசுமை உற்பத்தித்திறன் மற்றும் 3Rசெயன்முறை | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 04 |


| தொ. இல. | பயிற்சி பாடநெறி | பயிற்சியளித்த நிறுவனம் | தொ. இல. |
|---|---|---|---|
| 08 | பசுமை உற்பத்தித்திறன் மற்றும் 3Rசெயன்முறை | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 04 |
| 09 | வருடாந்த பொருட் கணிப்பீடு மற்றும் சொத்துக்களை அப்புறப்படுத்தல் | SDFL | 03 |
| 10 | வாகன முகாமைத்துவம் | பிராக் நிறுவனம் | 01 |
| 11 | தொழிற்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 04 |
| 12 | வரியீடு தொடர்பான பாடநெறி | இலங்கை கணக்கீட்டுக் கற்கை நிறுவனம் | 01 |
| 13 | Workshop on innovative leadership & talent Man-agement | | 01 |
| 14 | CPD Course on project Manage in PRIMAVERA | IESL | 01 |
| 15 | சிவில் ஓய்வூதிய கணக்கிடல் மற்றும் கொடுப்பனவு தொடர்பான பயிற்சி | SDFL | 01 |
| 16 | உள்ளக கணக்காய்வு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறை | SDFL | 01 |
| 17 | Public Sector Capacity Development for Service Ex-cellence | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 03 |
| 18 | தரவுப் பகுப்பாய்வு தொடர்பான அடிப்படை சான்றிதழ் பாடநெறி | இலங்கை மன்றம் | 01 |
| 19 | தகவலறியும் சட்டம் தொடர்பான ஒரு நாள் செயலமர்வு | தேசிய தொழிற்கல்வி நிறுவனம் | 01 |
| 20 | அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி அலுவலர்களுக்கான தொழிற்சார் அபிவிருத்தி | SDFL | 05 |
| 21 | ஒப்பந்த நிர்வாகம், கொடுப்பனவு நடைமுறை மற்றும் ஒப்பந்தம்சார் கோவைகளை பேணல் | SDFL | 02 |
| 22 | அலுவலக பணிகள் தொடர்பாகMs Word / Ms Excel மற்றும் மின்னஞ்சல், இணையத்தளம் பயன்பாடு | SDFL | 01 |
| 23 | சம்பள மாற்றம் தொடர்பான பயிற்சி | SDFL | 02 |
| 24 | உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஆளணியினருக்கான பயிற்சி செயலமர்வு | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் | 01 |
| 25 | களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு நடைமுறை பற்றிய பயிற்சி | SDFL | 06 |
| 26 | வலுசக்தி பாதிகாப்ப மற்றும் வினைத்திறனுடனான பயன்பாடு தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டம் | | 01 |
| 27 | Practical Aspects of Bid Evaluation | SDFL | 01 |
| 28 | லீன் எண்ணக்கரு தொடர்பான பயிற்சி செயலமர்வு | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 02 |
| 29 | உற்பத்தித்திறன் தொடர்பான தகவல் தொழிநுட்பம் | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 03 |
| 30 | உற்பத்தித்திறன் அளவீடுகள் மற்றும் பகுப்பாய்வு தொடர்பான பயிற்சி | தேசிய உற்பத்தித்திறன் செயலகம் | 02 |

## 3.7. தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்திற்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் வரவும் வருமானமும்—2017


*சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம்*

| மாதம் | வருகை | | | வருமானம் (ரூ.மில்.) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் | உள்நாடு | வெளிநாடு | பிற | மொத்தம் |
| சனவரி | 110,958 | 44,123 | 155,081 | 12.11 | 91.48 | 2.23 | 105.82 |
| பெப்ரவரி | 166,730 | 37,480 | 204,210 | 15.87 | 80.81 | 2.70 | 99.38 |
| மார்ச் | 201,452 | 33,932 | 235,384 | 15.00 | 73.66 | 2.58 | 91.25 |
| ஏப்ரல் | 188,308 | 28,586 | 216,894 | 18.61 | 59.65 | 2.76 | 81.02 |
| மே | 121,495 | 21,511 | 143,006 | 11.76 | 37.14 | 0.91 | 49.81 |
| ஜூன் | 121,965 | 18,328 | 140,293 | 11.30 | 34.87 | 1.80 | 47.97 |
| ஜூலை | 257,633 | 32,891 | 290,524 | 21.34 | 67.46 | 3.39 | 92.18 |
| ஆகஸ்ட் | 478,673 | 35,345 | 514,018 | 42.67 | 72.18 | 2.77 | 117.62 |
| செப்தெம்பர் | 295,305 | 25,126 | 320,431 | 28.76 | 47.00 | 2.40 | 78.16 |
| ஒக்ரோபர் | 214,328 | 28,130 | 242,458 | 20.91 | 49.18 | 3.53 | 73.61 |
| நவம்பர் | 108,484 | 24,587 | 133,071 | 11.32 | 49.23 | 2.53 | 63.08 |
| டிசெம்பர் | 250,939 | 39,646 | 290,585 | 26.56 | 66.33 | 5.83 | 98.72 |
| **மொத்தம்** | **2,516,270** | **369,685** | **2,885,955** | **236.21** | **728.98** | **33.43** | **998.62** |

### 3.7.1. உருப்படம்—சுற்றுலாப் பயணிகளின் வரவு 2017




### 3.7.2. உருப்படம்—சுற்றுலாப் பயணிகளினால் பெற்ற வருமானம் 2017



### 3.7.3. 2016 மற்றும் 2017 இடையே சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம்

| மாதம் | வருகை | | வருமானம் (ரூ.மில்.) | |
|---|---|---|---|---|
| | *2016* | *2017* | *2016* | *2017* |
| சனவரி | 160,663 | 155,081 | 105.57 | 105.82 |
| பெப்ரவரி | 185,976 | 204,210 | 116.98 | 99.38 |
| மார்ச் | 224,993 | 235,384 | 104.57 | 91.25 |
| ஏப்ரல் | 218,794 | 216,894 | 76.20 | 81.02 |
| மே | 107,398 | 143,006 | 50.49 | 49.81 |
| ஜூன் | 126,693 | 140,293 | 48.77 | 47.97 |
| ஜூலை | 355,423 | 290,524 | 108.50 | 92.18 |
| ஆகஸ்ட் | 552,892 | 514,018 | 134.36 | 117.62 |
| செப்தெம்பர் | 324,162 | 320,431 | 91.23 | 78.16 |
| ஒக்ரோபர் | 247,200 | 242,458 | 79.52 | 73.61 |
| நவம்பர் | 128,179 | 133,071 | 74.26 | 63.08 |
| டிசெம்பர் | 327,364 | 290,585 | 107.22 | 98.72 |
| **மொத்தம்** | **2,959,737** | **2,885,955** | **1097.66** | **998.62** |


### 3.7.4. தேசிய பூங்காக்களுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் - 2017

| பூங்கா | வருகை | | | வருமானம் (ரூ.மி.) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாடு | வெளிநாடு | மொத்தம் | உள்நாடு | வெளிநாடு | பிற | மொத்தம் |
| தெஹிவளை மிருகக்காட்சிசாலை | 1,360,566 | 27,626 | 1,388,192 | 108.124 | 42.199 | 17.745 | 168.067 |
| பின்னவல யானைகள் சரணாலயம் | 611,584 | 339,744 | 951,328 | 44.793 | 683.991 | 12.519 | 741.303 |
| பின்னவல மிருகக்காட்சிசாலை | 253,266 | 1,559 | 254,825 | 19.492 | 1.278 | 1.432 | 22.201 |
| ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா | 290,854 | 756 | 291,610 | 63.801 | 1.513 | 1.733 | 67.048 |
| **மொத்தம்** | **2,516,270** | **369,685** | **2,885,955** | **236.210** | **728.981** | **33.429** | **998.619** |


### 3.7.5. 2010 இருந்து 2017வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம்

| ஆண்டு | வருகை | வருமானம் (ரூ.மில்.) |
|---|---|---|
| 2010 | 2,324,360 | 587.74 |
| 2011 | 2,438,635 | 651.38 |
| 2012 | 2,196,704 | 645.29 |
| 2013 | 2,172,810 | 719.87 |
| 2014 | 2,042,887 | 906.50 |
| 2015 | 2,781,380 | 1,034.87 |
| 2016 | 2,959,737 | 1,097.66 |
| 2017 | 2,885,955 | 998.62 |

### 3.7.6. 2010 ஆண்டில் இருந்து 2017 ஆண்டு வரை சுற்றுலாப் பயணிகளின் வருகை




### 3.7.7. 2010 ஆண்டில் இருந்து 2017 ஆண்டு வரை சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் பெற்ற வருமானம்



## 3.8. பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்கள்

### 3.8.1. தெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்திப் பணிகள்

நவீன மிருகக்காட்சிசாலை எண்ணக்கருவுக்கு அமைய விலங்குகளுக்கு போதிய இடவசதிகளுடன் கூடிய விலங்கு ஆரணியங்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு நவீன வசதிகளை வழங்குமுகமாக 2011 ஆண்டில் இருந்துதெஹிவளை தேசிய மிருகக்காட்சிசாலையை நவீனமயப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

### நிதி மேம்பாடு

| | | |
|---|---|---|
- பூங்காவின் புற அழகை மேம்படுத்தும் நோக்கில் அதன் கட்டிடங்கள், வாசஸ்தலங்கள், தாவர இல்லம், சுற்று மதில், வசந்த இல்லங்கள், நிழல் இல்லங்கள் ஆகியன திருத்தியமைக்கப்பட்டதோடு, பூங்காவை உயர் மட்டத்தில் பேணும் பொருட்டு நில அலங்கரப் பணிகளும் ஏனைய பேணுகை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- பூங்காவுக்கு வாகனம் நிறுத்துமிடமொன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

- பூங்காவின் காரியாலயத்துக்கு முன்னாலுள்ள சுற்று வட்டப் பாதை புனரமைக்கப்பட்டது.

- பூங்காவின் பிரதான உத்தியோகபூர்வ இல்லம் திருத்தியமைக்கப்பட்டதோடு பாதுகாப்பு மதிலின் ஒரு பகுதி புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.



பாதுகாப்புக் கட்டின் ஒரு பகுதி மீளமைக்கப்பட்டது

- பார்வையாளர்களின் பாவனைக்காக புதிய கழிவறைத் தொகுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டது.

- பூங்காவின் ஊழியர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான இருமாடிக் கட்டிடமொன்றின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. அது ஊழியர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் கருவிகள் உபகரணங்களை சேமித்து வைக்கவும் பயன்படுத்தப்படும்.



பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள பூக்கள் சேகரிப்பு மாதிரிகள்

- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 56,875 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பூங்காவின் தாவரச் சேகரிப்புக்கு பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.

- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான தகவல் நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான தகவல்களை உள்ளடக்கிய பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டன.
- பூங்காவுக்கான பார்வையாளர் வருகையை அதிகரித்துக்கொள்ளும் நோக்கில் மக்கள் பார்வைக்காக ஓக்கிட் தாவர இல்லமொன்றினை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் **90%** வேலைகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இது தொடர்பான ஆலோசனை சேவைகளும் நிர்மாணப் பணிகளும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பொன்சாய்த் தாவரச் சேகரிப்பொன்றை அமைத்து மக்களின் பார்வைக்காக திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.
- பூங்கா அமைந்துள்ள காணியை அண்மித்துப் பாய்கின்ற அத்தனகலு ஓயாவின் கரை அரிப்புக்குள்ளாவது அதிகமாகையால் பூங்கா அமைந்துள்ள காணி அரிப்புக்குள்ளாகும் ஆபத்துக்கு உட்பட்டுள்ளது. அதனைத் தடுக்குமுகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன,

## 4.6.3. ஹக்கல தாவரவியல் பூங்கா

**நிதி மேம்பாடு**

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் | - கூட்டிணைந்த நிதியம் ரூ.மி. **3.914** |
| | - தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் ரூ.மி. **35.911*** |
| **2017** ஆண்டிற்கான செலவு | - ரூ.மி. **38.819** |

*திருத்தப்பட்ட மதிப். தொகை

**பௌதீக மேம்பாடு**

- பூங்காவின் வெளித் தோற்றத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அதன் கட்டிடங்கள், வாசஸ்தலங்கள், தாவர இல்லங்கள், வசந்த இல்லங்கள், சுற்றுலா விடுதி மற்றும் வேறு அங்கங்கள் நிறம் பூசப்பட்டு திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.
- தற்போதுள்ள உத்தியோகத்தர் வாசஸ்தலங்களுக்கு மேலதிகமாக புதிதாக 4 வாசஸ்தலங்கள் கொண்ட வீட்டுத் தொகுதி ஒன்றின் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.
- புதிய கழிவறைத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. பூங்காவின் கழிவறைத் தொகுதிகளை சிறந்த முறையில் பேணும் பொருட்டு பேராதனை பல்கலைக்கழக நிபுணர்கள் குழுவொன்றின் ஆலோசனைப் படி கழிவு நீர்க்குழிகள் 02 புதிதாக அமைக்கப்பட்டன. .
- பூங்காவின் கழிவு முகாமைச் செயன்முறையை பலப்படுத்தும் நோக்கில், கழிவுகளை சேகரித்து, வேறாக்கி களஞ்சியப்படுத்தவென மத்திய நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டது. .
- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் **128,789** தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. தேவையான பெயர்ப் பலகைகள் பொருத்தப்பட்டன.
- பார்வையாளர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான பிரசுரங்கள், விபரப் பலகைகள் ஆகியன தயாரிக்கப்பட்டு அச்சுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.



அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நுழைபாதை



கழிவு முகாமைத்துவ நிலையம்



பூங்காவின் பூமி அபிவிருத்திப் பணிகள்

- பூங்காவின் புதிய நுழைவாயில் அருகே வாகனம் நிறுத்துமிடம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் பட்டன. அங்கு மண் தொடர்பான தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஏற்பட்டமையால் அதனை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்று அடுத்த வருடம் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.
- பூங்காவின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு நில அபிவிருத்திப் பணிகளும் ஏனைய பேணுகை நடவடிக்கைளும் மேற்கொள்ளபப்ட்டன.
- பூங்காவின் பாதைகளின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு கற்கள் இடப்பட்டதோடு புதிய நுழைவுப் பாதியின் உட்பகுதி ஒழுங்கமைக்கப்பட்டது.
- பூங்காவின் புதிய நுழைவுச்சீட்டுக் கருமபீடத்தின் பாதுகாப்புக்காக "சேன்லிங்க்" வேலி அமைக்கப்பட்டது.

### 4.6.4. கனேவத்தை வன மூலிகை பூங்கா அபிவிருத்தி

**நிதி மேம்பாடு**

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் | - கூட்டிணைந்த நிதியம் ரூ.மி. **9.25** |
| | - தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் ரூ.மி. **0.71*** |
| **2017** ஆண்டிற்கான செலவு | - ரூ.மி. **9.943** |

*திருத்தப்பட்ட மதிப். தொகை

**பௌதீக மேம்பாடு**

- பூங்காவின் புற அழகை மேம்படுத்தி அதன் கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் சிறந்த முறையில் பேணப்பட்டு பூங்கா உயர் மட்டத்தில் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவில் தாவர வளர்ப்புச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு 27,318 க்கும் மேற்பட்ட கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. வருட ஆரம்பம் முதலே அதிக வறட்சி நிலவியமையால் தாவரச் சேகரிப்புக்களை புதிதாக உருவாக்க முடியவில்லையாயினும் ஏற்கனவே இருந்த தாவரச் சேகரிப்புக்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.
- பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் தேவையான குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டதோடு ஆசனங்களும் அமைக்கப்பட்டன.
- கன்றுகளை சாடிகளில் இடுவதற்கான தலங்கள் 02 அமைக்கப்பட்டன.
- தாவரக்கயப் பகுதியின் கூரை உட்பகுதி திருத்தியமைக்கப்பட்டதோடு தாவர இல்லமும் நவீனமயப்படுத்தப்பட்டது.
- சுதேச மருத்துவப் பெறுமதி வாய்ந்த உணவு, பானங்களின் விற்பனைக்கென நிர்மாணிக்கப்பட்ட உணவகம் பொதுமக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.
- மூலிகைகள் பற்றி அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், **2,416** பேருக்கு மூலிகைப் பாவனை, அவற்றின் பெறுமதி மற்றும் பேணுகை பற்றி விரிவுரைகள் நடாத்தப்பட்டன. பார்வையாளர்கள் மூலிகைகள் பற்றிய தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவும் தகவல் பிரசுரங்கள் 15 க்கும் விபரப் பலகைகள் 25 க்கும் தேவையான தகவல்கள் திரட்டப்பட்டு அவை தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டன.
- வறட்சி காலத்தில் பயன்படுத்தவென மழை நீரைச் சேகரிக்கும் இடமொன்று அமைக்கப்பட்டது.
- பூங்கா ஊழியர்களுக்காக கள அலுவலகமொன்றும் ஸ்தாபிக்கபப்ட்டது. நீரில் வளரும் மூலிகைகளின் சேகரிப்புக்காக குளமொன்று அமைக்கப்பட்டதோடு நில அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

.



நீரில் வளரும் மூலிகைகளின் சேகரிப்புக்காக அமைக்கப்பட்ட குளம்



திருத்தியமைக்கப்பட்ட தாவர இல்லம்



பூங்காவில் அமைக்கப்பட்ட ஆசனங்கள்



மூலிகைகள் பற்றி அறிவூட்டும்

- நீரில் வளரும் மூலிகைகளின் சேகரிப்புக்காக குளமொன்று அமைக்கப்பட்டதோடு நில அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன

## 4.6.5. தாவர ஆய்வகம் மற்றும் தாவர வகைப்படுத்தல் ஆராய்ச்சி

**நிதி மேம்பாடு**

அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் - பூங்காக்கள் பொறுப்பு நிதியம் ரூ.மி. **4.85**

**2017** ஆண்டிற்கான செலவு - ரூ.மி. **4.841**

**பௌதீக மேம்பாடு**

- உயிரினப் பூகோள விஞ்ஞானம் பற்றிய ஒரு நாள் செயலமர்வொன்று உயிரின விஞ்ஞான நிறுவனத்துடன் இணைந்து அரச தாவரவியல் பூங்காவின் கல்வி நிலையத்தில் தேசிய தாவரக்கயத்தினால் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டது. இங்கு உயிரினப் பூகோள விஞ்ஞானம் பற்றிய விரிவுரைகள் நடாத்தப்பட்டதோடு பிரயோக விளக்கங்களும் வழங்கப்பட்டன. பிரதானமாக பல்கலைக்கழக சமூகமும் ஏனைய சம்பந்தப்பட்ட துறையினரும் இதன் மூலம் அறிவூட்டப்பட்டனர். இதற்காக புளோரிடா பல்கலைக் கழக உயிரின விஞ்ஞான பீடத்தின் உயிரி விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த கலாநிதி நிகோ செலினஸ் (Dr. Nico Cellines ), தென்னாபிரிக்க க்வாஸுலு – நடால் (Kwasulu - Natal ) பல்கலைக் கழக சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி ரொபர்ட் டக்லஸ் ஸ்டோன் (Dr. Robert Dauglas Stone ) மற்றும் புளோரிடா பல்கலைக் கழக உயிரின விஞ்ஞான பீடத்தின் உயிரி விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த திருமதி பிரபா அமரசிங்ஹ ஆகியோர் பங்களிப்புச் செய்தனர்.



தேசிய ஆய்வகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நாள்

- உயிரினப் பல்வகைமை பேணல் மற்றும் தாவரக்கய தொழில்நுட்ப முறைகள் மற்றும் முகாமை பற்றிய 18 செயலமர்வுகள் 318 பாடசாலை மாணவர்களுக்கும், 448 பல்கலைக்கழக மாணவர்களுக்கும், அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகள் 143 பேருக்கும் நடாத்தப்பட்டன. அவ்வகையில் உயிரினப் பல்வகைமை என்றால் என்ன, உயிரினப் பல்வகைமையைப் பேணலின் முக்கியத்துவம் மற்றும் தாவரக்கயத்தின் பங்களிப்பு என்பன பற்றி விளக்கமளிக்கப்பட்டன. அத்தோடு புளோரிடா பல்கலைக் கழக மாணவர்கள் 25 பேருக்கு தாவரக்கயத்தின் வரலாறு மற்றும் செயற்பாடுகள் ஆகியன குறித்து விரிவுரையொன்றும் நடாத்தப்பட்டது.



தேசிய தாவரவகத்தினால் தேசிய சிவப்பு தரவு பட்டியல் நூல் தயாரிக்கும் செயற்திட்டக் கூட்டம்

- தாவரவியல் விஞ்ஞான ரீதியான தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதானமாக உலர் மற்றும் ஈர வலய, அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்களை இலக்காகக்கொண்டு இவ்வருட தாவரக் கண்டாய்தல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
- அவ்வகையில் **24** கள ஆய்வுகள் நடாத்தப்பட்டு பூக்கும் தாவர மாதிரிகள் **1,185** உம் பன்னத்தாவர மாதிரிகள் 106 உம் பாசித்தாவர மாதிரிகள் 47 உம் சேகரிக்கப்பட்டன.



உயிர் பல்வகைமை குறித்து பாடசாலை மாணவர்களுக்கு

- இம்மாதிரிகளுள் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்களை அடையாளம் காணும் பணி முன்னெடுக்கப்பட்டதோடு, அழிவுற்ற தாவர வகையைச் சார்ந்த ஒரு தாவர இனமும், அழிவுறும் ஆபத்துக்கு அதிகம் உட்பட்டுள்ள தாவரங்கள் 10 உம், அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் **80** உம், எதிர்காலத்தில் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட முடியுமான தாவரங்கள் 129 உம், அழிவுறும் ஆபத்துக்கு உட்படும் நிலையை அண்மித்துள்ள தாவரங்களும், **79** உம் அடையாளம் காணப்பட்டன. தாவர வெளிவாரிப் பேணுகை முறைமைகளைப் பயன்படுத்தி தேவையான தாவரப் பேணுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, சேகரிக்கப்பட்ட மாதிரிகள் தேசிய தாவரக்கயத்தில் எதிர்கால ஆய்வுகளுக்காக சேமித்து வைக்கப்பட்டன.

- இத்தாவரவியல் விஞ்ஞானத் தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது ரூமஸ்ஸல பிரதேச ஆய்வில், **2012**ம் ஆண்டின் சிவப்புத் தரவுப் பட்டியலில், அழிந்து விட்ட தாவரம் எனக் குறிப்பிடப்பட்ட *Rinorea bengalensis* தாவரம் கண்டுபிடிக்கப்பட்டது. தாவரவியல் விஞ்ஞானத் தாவரக் கண்டாய்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேலதிகமாக அரிய மூலிகைத் தாவரங்களைக் கண்டறிவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றும் பேராதனை அரச தாவரவியல் பூங்காவோடு இணைந்து முன்னெடுக்கப்பட்டது. அதன் போது 42 அரிய மூலிகை வகைகள் சேகரிக்கப்பட்டு, பேணுகை நடவடிக்கைகளுக்காக அவை கனேவத்த மூலிகைப் பூங்காவுக்குக் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கனேவத்த மூலிகைப் பூங்காவின் தாவரச் சேகரிப்பை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.



2012 சிவப்பு தரவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ***Rinorea bengalensis*** தாவரம்

- பாசித் தாவரப் பேணுகை நிகழ்ச்சித் திட்டமொன்றும் தாவரக்கயத்தினால் முன்னெடுக்கப்பட்டு கள ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட பாசித் தாவர மாதிரிகளின் சேகரிப்பொன்று பேராதனை அரச தாவரவியல் பூங்காவில் ஸ்தாபிக்கப்பட்டது.

- தேசிய தாவரக்கயத்தினால் தேசிய சிவப்புத் தரவுப் புத்தகத்தைத் தயாரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு பெரும் பங்களிப்புச் செய்யப்பட்டது. அதன் போது தாவர மாதிரிகளை மதிப்பீடு செய்தல், தகவல் சேகரித்தல் மற்றும் தாவரங்களின் பெயர்களை உறுதிப்படுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக வெளியாருக்காக தாவரங்களின் பெயர்களை உறுதிப்படுத்தல், தாவர அடையாளம் காணல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டதோடு, இலங்கை பொலிஸ், நீதிமன்றங்கள் மற்றும் தேவையுடைய ஏனைய நிறுவனங்களுக்காகவும் இச்சேவைகள் வழங்கப்பட்டன.

- " Common Wayside Trees of Sri Lanka " என்ற புத்தகம் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அதில் 200 தாவர மாதிரிகளது புகைப்படங்களுடன் விஞ்ஞானத் தகவல்கள், பொதுப் பெயர், பாதுகாப்பு நிலை, வாசஸ்தலம் என்பன பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்தோடு அது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் தகவல்களை உள்ளடக்கியுள்ளது.

- இலங்கையின் அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள், ஆக்கிரமிப்புத் தாவரங்கள், பன்னத் தாவரங்கள் மற்றும் கள ஆய்வுகளின் போது சேகரிக்கப்பட்ட அழிவுறும் ஆபத்துக்கு உட்பட்டுள்ள தாவரங்கள் ஆகியன பற்றிய பிரசுரங்கள், சுவரொட்டிகள் பிரசுரத்துக்காகத் தயார்படுத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, உலகப் பிரசித்தி பெற்ற ஹரமானிஸ் டீ. அல்விஸ் தாவரப் படங்களின் சேகரிப்பை பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு எதிர்வரும் வருட ஆரம்பத்தில் அது பிரசுரிக்கபப்டும். அதில் அழகிய தாவரப் படங்கள் 184 அத்தாவரங்கள் பற்றிய விபரங்களுடன் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- மத்திய மாகாணத்தினுள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களது பாசித் தாவரங்களது பல்வகைமையைக் காட்டும் விஞ்ஞான சுவரொட்டியொன்று தயாரிக்கப்பட்டு சர்வதேச கருத்தரங்கொன்றில் (27 வது ஆசிய பசுபிக் வன விஞ்ஞான ஆணைக் குழு) காண்பிக்கப்பட்டது.

- தேசிய தாவரக்கயத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள வரைபடங்கள் மற்றும் மாதிரிகளது எண்ணிக்கையை நிர்ணயித்துக்கொள்ளும் பொருட்டும் ஆய்வுப் பணிகளை இலகு படுத்தும் நோக்கிலும் அம்மாதிரிகளுக்கு நுழைவு எண்களை (Accession number ) வழங்கி அவற்றை தரவு முறைமையொன்றிற்கு உட்புகுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தேசிய தாவரக்கயக் கட்டிடத்தின் கூரைத் திருத்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டதோடு, தாவரக்கயத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகளை சிறந்த முறையில் பேணுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## 4.6.6. தேசிய பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

**நிதி மேம்பாடு**

அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் **- கூட்டிணைந்த நிதியம் ரூ.மி. 10.00**

**- தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் ரூ.மி. 24.626 ***

**2017** ஆண்டிற்கான செலவு **- ரூ.மி. 34.597**

*திருத்தப்பட்ட மதிப். தொகை

**பௌதீக மேம்பாடு**



விவசாயிகளுக்கு விழிப்பூட்டல்



திருத்தப்பட்ட பீகோனியா நாற்றுமனை



மலர் கண்காட்சி



மலர்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நடுகைப் பொருட்கள் வழங்கல்

- சிறு மற்றும் நடுத்தர பூ வளர்ப்போரை பலப்படுத்தி அவர்களது பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக இவ்வருடமும் பூச்செடியியல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- நாடாளாவிய ரீதியில் பூச்செடியியலை விஸ்தரிக்குமுகமாக பூ வளர்ப்போர் சங்கங்கள் **185** செயற்படுவதோடு அவற்றினூடாக சுமார் பேர் நன்மையடைகின்றனர். அந்தூரியம், ஓக்கிட், ரோசா, ஜெர்பரா, வெட்டு இலைகள் மற்றும் இழைய வளர்ப்பு ஆகிய துறைகள் பற்றி **21,724** பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது.
- பூ வளர்ப்போரது தொழில்நுட்ப மற்றும் ஏனைய திறமைகளை வளர்ப்பதற்காக **14** செயலமர்வுகள் நடாத்தப்பட்டு 1,059 பூ வளர்ப்போர் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- பூ வளர்ப்போரது உற்பத்திகளின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு சிற்றளவிலான கண்காட்சிகள் 322ம் மாவட்ட மட்டத்திலான பெரிய கண்காட்சிகள் 20ம் நடாத்தப்பட்டன. பூ வளர்ப்போரது 1514 நாற்று மேடைகளுக்கு சென்று களப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைச் சபையின் ஒத்துழைப்புடன் 2017 ஒக்டோபர் 30ம் திகதி பூச்செடியியல் ஆராய்ச்சி சம்பந்தமான தேசிய மாநாடு நடாத்தப்பட்டது. அதன் போது பூச்செடியியல் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அத்துறையின் அபிவிருத்தி குறித்தும் 22 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- நாட்டின் பூச்செடியியல் தொழிற்துறையை மேம்படுத்தும் பொருட்டு நிகழ்கால மற்றும் எதிர்கால களத் தேவைகளை ஈடு செய்யும் வகையிலான பல ஆய்வுகள் செய்யப்பட்டதோடு தற்போது பூ வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அத்தோடு வர்த்தக ரீதியிலான பூ வளர்ப்பு, நாற்று மேடை முகாமைத்துவம், நோய் மற்றும் பீடை முகாமைத்துவம் பற்றிய பிரச்சினைகளுக்கு தனிநபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இலவச ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
- களத்திலும் இரசாயனகூட வசதிகளின் கீழும் ஓக்கிட் கலப்பினங்கள் மற்றும் அந்தூரியம் வகைகளை உருவாக்குவது பற்றி ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
- அனைத்துப் பூங்காக்களதும் பூச்செடிச் செய்கை அலகுகளின் நாற்றுமேடைகள் உயர் தரத்தில் பேணப்பட்டதோடு, அவற்றின் அபிவிருத்திக்குத் தேவையான வளர்ப்பு ஊடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பேராதனை பூங்காவின் பிகோனியா தாவர இல்லம் பழுதுபார்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது. பேராதனை பூச்செடியியல் அலகின் ஆய்வு கூடமும் திருத்தியமைக்கப்பட்டது.

- பூச்செடியியல் மற்றும் தாவரங்கள் சம்பந்தமான தகவல்களை கொழும்புப் பிரதேச மக்களுக்கு வழங்கும் தகவல் நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட்ட நாரஹேன்பிட உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில், பூச்செடியியல் துறை மற்றும் தாவரங்கள் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்பட்டு பூச்ச்செடியியல் துறை மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வகையில் அந்நிகழ்ச்சிகளிலிருந்து 488 பேர் பயனடைந்தனர்.

- பூச்செடியியல் துறையில் ஈடுபடும் பூ வளர்ப்போர் சங்கங்களது அங்கத்தவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கில் நிழல் வலைகள், பொலித்தீன், பிளாஸ்டிக் பூச்சாடிகள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 4.6.7. கல்வி மற்றும் பயிற்சி

**நிதி மேம்பாடு**

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் | - கூட்டிணைந்த நிதியம் ரூ.மி. **0.50** |
| | - தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் ரூ.மி. **2.25*** |
| **2017** ஆண்டிற்கான செலவு | - ரூ.மி. **2.743** |

*திருத்தப்பட்ட மதிப். தொகை

**பௌதீக மேம்பாடு**

- பேராதனை தாவரவியல் பூங்காவின் கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் வசதிகள் மேம்படுத்தப்பட்டு திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- இளைஞர்கள் 120 பேர் நவீன பூச்செடிச் செய்கை முறைமைகள் மற்றும் நில அலங்கார முறைமைகள் பற்றி மூன்று மாத சான்றிதழ் பாடநெறியினூடு பயிற்றுவிக்கப்பட்டனர்.

- நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர்களுக்கான தேசிய தொழில் பயிலுனர் தகைமைச் சான்றிதழ் - 4ம் மட்டத்தினை (NVQ- level 4 ) வழங்கும் ஒரு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு 7 பேர் தம்மைப் பதிவு செய்து கொண்டு கற்கையைத் தொடர்கின்றனர்.

- ரோசா வளர்ப்பு, நாற்றுமேடை முகாமை, தாவர அடையாளம் காணல், தாவர சத்திர சிகிச்சைகள், பூ அலங்காரம், அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பம், நில அலங்காரம் மற்றும் ஏனைய விடயங்கள் குறித்து 12,709 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் உயிரினப் பல்வகைமை மற்றும் அதனைப் பாதுகாத்தல் பற்றி பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 220 பேருக்கு அறிவூட்டப்பட்டது.

- திணைக்கள அதிகாரிகளது இயலுமை விருத்திக்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதோடு தேவையான சந்தர்பபங்களில் திணைக்களத்துக்கு வெளியிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- சிறார்களுக்கான நிகழ்ச்சியொன்று சர்வதேச சிறுவர் தினமான ஒக்டோபர் 01ம் திகதியன்று சுயாதீன தொலைக்காட்சியுடன் இணைந்து நடாத்தப்பட்டது.



ஓர்க்கிட் வளர்ப்பு பற்றிய ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம்



திணைக்கள அலுவலர்களுக்கு தாவரவக தொழிநுட்ப முறைகள் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான அறிவூட்டல் வழங்கல்

### 4.6.8. மீகலேவ ஹரித பியஸ (பசுமை இல்லம்) பயிற்சி நிலையம்

**நிதி மேம்பாடு**

அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் - கூட்டிணைந்த நிதியம் ரூ.மி. **6.00***

**2017** ஆண்டிற்கான செலவு - ரூ.மி. **5.982**

*திருத்தப்பட்ட மதிப். தொகை

**பௌதீக மேம்பாடு**



தாவர வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்

- **05**ம் இலக்க கள அலுவலகக் கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டன.
- தாவர வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு 37,970 கன்றுகள் உருவாக்கப்பட்டன.
- அத்தோடு கள நடவடிக்கைகளுக்குத் தேவையான இயந்திரங்களும் அலுவலக உபகரணங்களும் வேறு கருவிகளும் கொள்வனவு செய்யப்பட்டன.

### 4.6.9. மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியற் பூங்கா ஹம்பாந்தோட்டை

**நிதி மேம்பாடு**

அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் -கூட்டிணைந்த நிதியம் ரூ.மி. **74.20 ***

**2017** ஆண்டிற்கான செலவு - ரூ.மி. **73.205**

*திருத்தப்பட்ட மதிப். தொகை

**பௌதீக மேம்பாடு**




புதிய தெற்கு நுழைவாயிலுக்கு அருகில்

- பூங்காவின் அடிப்படை மற்றும் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- தற்போதுள்ள பணியாளர் உத்தியோகபூர்வ இல்லங்கள் 03 க்கு மேலதிகமாக புதிதாக 04 இல்லங்கள் கொண்ட கட்டிடத் தொகுதி ஒன்றின் நிர்மாணப் பணிகள் இடம் பெற்று வருகின்றன. அதன் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- பூங்காவினதும் பிரதேசத்தினதும் பூச்செடியியல் அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு பூச்செடியியல் கண்காட்சிகளை நடாத்துவதற்கான மத்திய நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டது. அதன் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் எதிர் வரும் வருடம்

- பூங்காவின் தாவர இனப்பெருக்க நடவடிக்கைகளுக்குத் தேவையான விதைகளை சேமித்து வைப்பதற்கான அறையொன்றை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.
- தாய்த் தாவரங்களின் சேகரிப்பொன்றை அமைப்பதற்குத் தேவையான நிழல் இல்லமொன்றை அமைக்கத் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
- பார்வையாளர்களின் பாவனைக்கென புதிய உணவகமொன்றின் நிர்மாணப் பணிகளும் உத்தியோகபூர்வ இல்லமொன்றின் நிர்மாணப் பணிகளும் இவ்வருடம் நிறைவு செய்யப்பட்டன.
- பூங்காவின் பாதைகளை மேம்படுத்தும் பொருட்டு அவற்றுக்கு காபட் இடப்பட்டன.
- பூங்காவுக்கான புதிய நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்ட பகுதியில் 02 வசந்த இல்லங்களும் முறையான பூங்காவில் 04 வசந்த இல்லங்களும் நிர்மாணிக்கப்பட்டன.
- பூங்காவின் நில அலங்கார வடிவமைப்பை மேம்படுத்த அலங்காரத் தாவரங்களைக் கொண்ட பூந்தோட்டங்கள், நடை பாதைகள், பாதைகள் மற்றும் ஏனைய பூங்காவியல் அம்சங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கள அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போருக்கு வசதியளிக்கும் வகையில் பூங்காவின் பூச்செடியியல் அபிவிருத்திப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதோடு, பூச்செடியியல் விரிவாக்க அலுவலகத்தின் வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. பிரதேசத்தைச் சேர்ந்த பூ வளர்ப்போரை ஊக்குவித்து அவர்களது இயலுமையை விருத்தி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்கவென செயலமர்வுகளும் பயிற்சிச் செயலமர்வுகளும் நடத்தப்பட்டன.
- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் 43,414 தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- புதிதாக அலுவலகமொன்றும் சிறிய தாவரக்கயமொன்றும் கூட்ட அரையொன்றும் வாசிகசாலையொன்றும் பார்வையாளர் மத்திய நிலையமொன்றும் தெற்கு நுழைவாயில் அருகே அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு முதலாம் கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- பூங்காவின் மின் பாவனைக்காக செலவிடப்படும் பெருந்தொகைப் பணத்தை சேமித்துக்கொள்ளும் நோக்கில் சூரிய ஒளி மூலமான மின்சார பற்றரித் தொகுதியோன்றைப் பொருத்துவதற்கான கேள்வி மனுக்கள் கோரப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் அப்பணி நிறைவுறும்.
- பூங்காவுக்குத் தேவையான பெயர்ப் பலகைகள், விபரப் பலகைகள் மற்றும் வழிகாட்டிப் பலகைகள் ஆகியவற்றைப் பொருத்துவதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவின் மத்திய குளப் பிரதேசம் மற்றும் முறையான பூங்கா ஆகியவற்றின் கழிவு நீர் அகற்றலுக்கான வடிகான்கள் அமைக்கப்பட்டன.
- பூங்காவின் தெற்கு நுழைவாயில் பகுதியின் வாகனத் தரிப்பிட அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யபப்ட்டன.



புதிய அலுவலகமும் தகவல் நிலையமும்



மலர் செய்கையை



பூங்காவின் மத்திய பகுதியிலும்



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 04 வாசஸ்தலங்கள் கொண்ட கட்டிடத் தொகுதியின் முதலாம் கட்ட



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொற்று நீக்கல் அலகும் களஞ்சிய சாலையும்




தெற்கு நுழைவாயில் அருகே பாதைக்கு காபட் இடல்

### 4.6.10. சீதாவக ஈர வலய தாவாரவியல் பூங்கா, அவிசாவலை

#### நிதி மேம்பாடு

அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் **- கூட்டிணைந்த நிதியம் ரூ.மி. 25.45**
**- தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பு நிதியம் ரூ.மி. 2.403***

**2017 ஆண்டிற்கான செலவு - ரூ.மி. 27.663**

*திருத்தப்பட்ட மதிப். தொகை

#### பௌதீக மேம்பாடு

- பூங்காவினுள் பார்வையாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தவும் பேணுகை நடவடிக்கைகளை உயர் மட்டத்தில் மேற்கொள்ளவும் பூங்காவினுள் புதிய வசதிகளை ஏற்படுத்தவும் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.
- பூங்காவுக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் குளத்துக்கு அண்மையில் தோணித் துறையொன்றும் இறங்கு துறையொன்றும் நிர்மாணிக்கப்பட்டன.
- ரோசாப் பூந்தோட்டம், ஜப்பான் பூங்கா, பன்னத் தாவரச் சேகரிப்பு ஆகிய இடங்களுக்கண்மையில் 02 வசந்த இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டன.
- பூங்காவினுள் குடிநீர் வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதோடு, நீர்ப் பம்பி அறையின் திருத்த வேலைகள் நிறைவு செய்யப்பட்டன.
- பூங்காவைச் சூழ அமைக்கப்படவுள்ள பாதுகாப்பு வேலியின் ஒரு பகுதி நிறைவு செய்யப்பட்டது.
- புதிய கழிவறைத் தொகுதி ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது.
- பூங்காவின் பூச்செடியியல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் அந்தூரியம் மற்றும் ஓக்கிட் நாற்று மேடைகளை உள்ளடக்கிய நிழல் இல்லம் பூங்காவின் தாவர நாற்று மேடை அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கு மாற்றப்பட்டது.
- பூங்காவின் நில அலங்கார வடிவமைப்பை மேம்படுத்த அலங்காரத் தாவரங்களைக் கொண்ட பூந்தோட்டங்கள், நடை பாதைகள் மற்றும் ஏனைய அம்சங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கள அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- பூங்காவின் உயிர்த் தாவரச் சேகரிப்புக்கு புதிய தாவர வகைகள் சேர்க்கப்பட்டு தாவரச் சேகரிப்பு பலப்படுத்தப்பட்டு, தாவரப் பேணுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் இப்பூங்காவில் **61, 248** தாவரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- பூங்காவை பிரபலப்படுத்தும் நோக்கில் பாதைகளின் இரு மருங்குகளிலும் பொருத்துவதற்கான பெயர்ப் பலகைகள் தயாரிக்கப்பட்டு பொருத்தப்பட்டன.



வாவிக்கருகே நிர்மாணிக்கப்பட்டு வரும் படகு செயற்களம்



ஜப்பான் பூங்கா அருகே கோடை கால குடில்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய கழிவறைத் தொகுதி



நில அலங்கார மேம்படுத்தல்

- அனைத்துப் பூங்காக்களையும் செயற்றிறன் மிக்க வகையில் முகாமைதத்துவம் செய்வதற்குத் தேவையான புதிய பொறிகள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் ஆகியன கொள்வனவு செய்யப்பட்டதோடு, இருக்கும் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பூங்கா உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டு பூங்காக்களின் அலங்காரம் உயரிய முறையில் பேணப்பட்டன.



அனுராதபுரம் புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணல்

- மேலே குறிப்பிட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக இத்திணைக்களத்தால், கண்டி, ஜாவத்த, பொரளை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலுள்ள பொது நலவாய போர் சமாதிகள், அதி மேதகு ஜனாதிபதி அவர்களது கொழும்பு (01) , கண்டி, நுவரெலியா மற்றும் அனுராதபுர வாசஸ்தலங்களின் பூங்காக்கள், மாண்பு மிகு பிரதமரின் அலரி மாளிகைப் பூங்கா மற்றும் நுவரெலியா வாசஸ்தலப் பூங்கா ஆகியவற்றின் பேணுகை மற்றும் அனுராதபுரம் புனித வெள்ளரச மரத்தின் ஆரோக்கியம் பேணல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

## 4.7. நிதி மேம்பாடு

பிரதான பூங்காக்களிலும் ஏனைய அலகுகளிலும் அபிவிருத்திப் பணிகள் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்பட்டதோடு 2017ம் ஆண்டிற்கான திணைக்களத்தின் நிதி முன்னேற்றம் 99% ஆகும்.

### 4.7.1. 2017ம் ஆண்டின் செலவு விபரம்

| விபரம் | மொத்த ஏற்பாடு (ரூ.மி.) | மொத்தச் செலவு(ரூ.மி.) | % |
|---|---|---|---|
| மூலதன நிதி ஒதுக்கம் | **300.05** | **297.36** | **99.1** |
| மீண்டுவரும் நிதி ஒதுக்கம் | **364.69** | **358.28** | **98.2** |
| **மொத்தம்** | **664.74** | **655.64** | **98.6** |

### 4.7.2. 2017ம் ஆண்டு திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு

| **நிகழ்ச்சித் திட்டம்** | 2017ம் ஆண்டுக்கான அரசின் ஒருங்கிணைந்த ஒதுக்கீடு (ரூ.மில்) | 2017ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒதுக்கீட்டின் செலவு (ரூ.மில்) | 2017 ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் ஒதுக்கீடு | 2017 ம் ஆண்டு தாவாரவியல் பூங்காக்கள் நம்பிக்கை நிதியத்தின் ஒதுக்கீடு | 2017ம் ஆண்டுக்கான மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்) | மொத்தச் செலவு (ரூ.மில்) | % |
|---|---|---|---|---|---|---|---|
| பேராதனை தாவரவியற் பூங்காவின்அபிவிருத்தி | **2.579** | **2.560** | **28.310** | **28.195** | **30.889** | **30.755** | **99.6** |
| கம்பஹா தாவரவியற் பூங்காவின் அபிவிருத்தி | **16.55** | **15.334** | **17.250** | **17.232** | **33.80** | **32.566** | **96.3** |
| ஹக்கல தாவரவியற் பூங்காவின் அபிவிருத்தி | **3.941** | **3.929** | **35.911** | **35.890** | **39.852** | **39.819** | **99.9** |
| கனேவத்த வன மூலிகைப் பூங்காவின் அபிவிருத்தி | **9.25** | **9.236** | **0.710** | **0.707** | **9.960** | **9.943** | **99.8** |
| மீகலேவ ஹரித பியஸ பயிற்சி நிலையத்தின் அபிவிருத்தி | **6** | **5.982** | **0.0** | **0.0** | **6** | **5.982** | **99.7** |
| கல்வி மற்றும் பயிற்சி | **0.5** | **0.496** | **2.250** | **2.247** | **2.750** | **2.743** | **99.7** |
| தாவர ஆய்வகம் மற்றும் தாவர வகைப்படுத்தலும் ஆராய்ச்சியும் | **0.0** | **0.0** | **4.850** | **4.841** | **4.850** | **4.841** | **99.8** |
| தேசிய மலர் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | **10** | **9.985** | **24.626** | **24.612** | **34.626** | **34.597** | **99.9** |
| சீத்தாவக்க ஈர வலய தாவரவியற் பூங்கா, அவிசாவளை | **25.45** | **25.260** | **2.403** | **2.403** | **27.853** | **27.663** | **99.3** |
| மிரிஜ்ஜவில உலர் வலய தாவரவியற் பூங்கா, ஹம்பாந்தோட்டை | **74.2** | **73.205** | **0.0** | **0.0** | **74.20** | **73.205** | **98.7** |
| பிரதான அலுவலகத்தின் மேம்பாட்டுப் பணிகள், தாவரவியல் பூங்காவின் அலங்காரம் மற்றும் மேம்பாடு | **1.58** | **1.572** | **33.690** | **33.671** | **35.270** | **35.243** | **99.9** |
| **மொத்தம்** | **150.05** | **147.559** | **150.0** | **149.798** | **300.05** | **297.357** | **99.1** |

# 5. இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு நிதியம்

# தொலைநோக்கு

**“இலங்கையில் வன விலங்குகளைப் பேணி பாதுகாப்பதற்கான பங்களிப்பினை நல்குதல்”**

# பணிநோக்கு

**“வனசீவராசி வளங்களை பாதுகாப்பது குறித்து மக்களை விழிப்பூட்டல்”**

# நோக்கங்கள்

- இலங்கையின் இயற்கை மரபுரிமைகள், சுற்றாடல் மற்றும் பொருளாதாரப் பெறுமானங்களை பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்
- வனசீவராசிகள் மற்றும் சுற்றாடல் கற்கைகள் பற்றி பிரபல்யப்படுத்தல்
- இலங்கையின் வனசீவராசிகள் பாதுகாப்பு பணிகள் தொடர்பாக ஒத்துழைப்பு வழங்கல்
- பாதுகாப்பு வலயங்களை அண்டிய சமுதாய அபிவிருத்தி பணிகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- வனசீவராசிகள் / சுற்றாடல் சட்டங்களை பிரபல்யப்படுத்தல்
- சுற்றாடல் சுற்றுலா வசதிகளையும், தொடர்பாடல் பணிகளையும் பேணல் மற்றும் ஒழுங்கமைத்தல்
- இலங்கையின் இயற்கை மற்றும் கலாசார பெறுமானங்கள் பற்றி தேசிய மற்றும் சர்வதேச ரீதியான புரிந்துணர்வை மேம்படுத்தல்

# நிர்வாகம்

இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் நிர்வாகப் பணிகளில் 10 உறுப்பினர்கள் பணிபுரிகின்றனர். அதாவது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உத்தியோகபூர்வமாக தலைவராகவும், வனசீவராசிகள் துறைசார் அமைச்சின் செயலாளர், வன பரிபாலன பாதுகாப்பாளர் நாயகம், நிதி அமைச்சின் பிரதிநிதி, இலங்கை சுற்றுலாச் சபை பிரதிநிதி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிநிதி, அரச சார்பற்ற நிறுவனங்களின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் தனியார் வர்த்தக துறையின் இருவர் ஆகியோர் உள்ளடங்குவர்.

# 5. இலங்கை வனசீவராசிகள் பொறுப்பு நிதியம்

## 5.1. வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் வருமானம் வழிவகை

வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் அனைத்து பணிகளுக்கும் வருமானம் ஈட்டவேண்டியுள்ளது. அதற்கான 04 வழிமுறைகள் கீழே காணப்படுகின்றன.

- நிதி முதலீடு
- ரன்தெனிகல பயிற்சி நிலைய வசதிகளை வாடகைக்கு விடல்
- சுற்றாடல் சுற்றுலா அலுவல்கள்
- விற்பனை நடவடிக்கைகள் (தொடர்பாடல் பொருட்கள் ஆகியன)

பாதுகாப்பு சேவைகளை விருத்தி செய்வதன் மூலம் வனசீவராசிகள் பொறுப்பு நிதியத்தின் ஆண்டுக்கான வருமான அதிகரிப்புக்கு அது வழிவகுக்கின்றது

## 5.2.வனசீவராசிகள் பொறுப்புநிதிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சேவைகள்

வனசீவராசிகள் பொறுப்பானது தனது வருடாந்த வருமானத்தின் 50% பல்வேறு பாதுகாப்புச் சேவைகளை பேணும்பொருட்டு செலவிடுகின்றது.

- **சமுதாய கல்வி நிகழ்ச்சித்திட்டம்**

இதன் கீழ் நடமாடும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வு, ஆய்வுச் சுற்றுலா, ஒருநாள் விழிப்புணர்வு செயலமர்வு, மூன்றுநாள் வதிவிட ஆய்வுச் சுற்றுலா மற்றும் ஆறுமாத வனசீவராசிகள் பாதுகாப்பு சான்றிதழ் பாடநெறி ஆகியன உள்ளடங்குகின்றன. அதற்கு மேலதிகமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் வனசீவராசிகள் பொறுப்பினால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

- **பாடசாலைக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுற்றாடல் சார்ந்த அலுவல்கள்**

இந் நிகழ்ச்சித் திட்டம், வனசீவராசிகள் பொறுப்பின் பிரதானமான நிகழ்ச்சித்திட்டமாகும். மிக முக்கியமான உயிர்பல்வகைமை பெறுமானகளைங் கொண்ட வனசீவராசிகள் வலயத்தை அண்டியுள்ள பாடசாலைகள் தொடர்பாக இதன்போது முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. வனசீவராசிகள் வலயத்தை அண்டியுள்ள பாடசாலைகளின் செயற்பாடுகள் குறித்து ஆசிரியர்கள் மற்றும் மாணவ குழுக்களை இணைத்து அவர்களது அடிப்படை பங்குபற்றல் மற்றும் திட்டமிடலின் கீழ் குறுகியகால செயற்பாடுகளைக் கற்பதற்கான திட்டங்கள் ஊடாக இச் செயற்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- **சமுதாய அமைப்புக்களை வலுவூட்டி மேம்படுத்தல்**

வனசீவராசி பாதுகாப்பு வலயத்தினுள்ளும் சுற்றுச் சூழலிலும் உள்ள மக்களின் அபிவிருத்திச் செயன்முறையை நோக்காகக் கொண்டு சமுக பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதே இதன் குறிக்கோளாகும். தற்போது இதன் மூம் 7 தகவல் பரிமாற்ற மற்றும் விற்பனை நிலையங்கள் சிறப்பாக பேணப்பட்டு வருகின்றன.

- **ஆய்வுகள்**

இதன் கீழ் குறித்த துறையில் பல்வேறு மட்டத்திலான ஆய்வுகள் தொடர்பாக ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுகின்றன. விசேடமாக பல்கலைக்கழக மட்டத்தில் பட்டதாரிகள், பட்டப்பின் பட்டதாரிகள் ஆகியோர் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாகவும், உயர் தர மாணவர்கள் தொடர்பாகவுமான செயற்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கின்றனர்.

- **தொடர்பாடல் மற்றும் செய்திப் பிரிவு செயற்திட்டம்**

வனசீவராசிகள் பொறுப்பின் விற்பனை நிலையத்தின் வெளியீட்டுப் பணியகம், காட்சிப்படுத்தல் பிரிவுடன் தொடர்புடைய பணிகள் இதனுள் அடங்குகின்றன. தற்போது வனசீவராசிகள் பொறுப்பின் மூலம் தகவல் தொடர்பாடல் மற்றும் 7 விற்பனை நிலையங்கள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 5.3. 2017 ஆண்டில் இலங்கை வனசீவராசிகள் பொறுப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் மேம்பாடு

- 53 நாடுகளின் 103 போட்டியாளர்களைக் கொண்ட **Racing the planet** நிகழ்ச்சித்திட்டம் **- 01**
- ஏற்றுமதி தொடர்பாக மலர் செயற்திட்டமொன்றை ஏற்பாடு செய்வது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்—5
- புதிதாக 04 விற்பனைக்கூடங்களை ஆரம்பித்தல்.—தெஹிவளை, சபாரி பூங்கா ரிதீகம 02, 'எத்அத்துரு செவன'
- பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துதல்— **02**
- வழிகாட்டிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் **- 03**
- புகைப்பட சங்கமொன்றைத் தாபித்தல்— அங்கத்தவர்களின் எண்ணிக்கை 92. ஆகும்.
- பாடசாலைகள் மற்றும் திறந்த புகைப்பட கண்காட்சிகள் நடாத்தல் **- 2016.09.05**
- இயற்கையைப் பாதுகாப்பது குறித்த புத்தக கண்காட்சி 2016.09.16 ஆந் திகதியில் இருந்து
- இயற்கையைப் பாதுகாப்பது குறித்த 06 புத்தகங்களை வெளியிடுதல். (6000 பிரதிகள்—இலங்கையின் பாலூட்டி விலங்குகள், இலங்கைக்கேயுரித்தான பறவைகள், அமேசன் மழைக்காடுகள், கல்........., புவி வெப்பமயமாக்கல்)
- ஹோட்டர்தென்ன மலர் தொடர்பாக எழுதப்பட்ட புத்தகத்தின் விநியோக முகவராண்மையைப் பொறுப்பேற்றல்.
- 08 வீடியோ நாடாக்களை தயாரித்தல்.
- **CITES 17** மாநாட்டின் பிரச்சாரப் பொருட்களைத் தயாரித்தல்
- **Wild Lanka** சஞ்சிகையை வெளியிடுதல் **(1000 பிரதிகள்)**
- இணையத்தில் வலைத்தள பக்கத்தை ஆரம்பித்தல்
- 03 முகநூல் சமூக வலைத்தள பக்கங்களைத் உருவாக்குதல் மற்றும் பேணல். (3000 அங்.)
- மின்வேலிகளில் மின்
- மின்னல் வேலிகளின் மின்முறிவுகள் மற்றும் மாற்றங்களது தன்னியக்க கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடுவது தொடர்பான முறையியல்களை திட்டமிடல் மற்றும் பிரயோக

- $Co_2$NegSL செயற்திட்டம் - பொதுச் சேவை மற்றும் நிறுவனங்களின் காபன் கசிவுகளைக் குறைத்தல் மற்றும் வெளியிடப்படும் காபனை உறிஞ்சுவதற்கான சமவிகித மரநடுகை

- புகையிரதம் - யானை மோதல் தொடர்பாக இலத்திரனியல் முறைமையொன்றைத் தயாரித்து 'பேட்டன்ட் அனுமதிப்பத்திரம் தொடர்பாக விண்ணப்பித்தல்.

- புகையிரதப் பாதையில் காட்டு யானைகளின் மோதலைத் தடுப்பதற்காக தயாரிக்கப்பட்ட முறைமையை புகையிரதப் பாதைகளில் பொருத்துவதற்கு ஆரம்பித்தல்.

- சமூக வலைத்தளங்கள் மற்றும் சுற்றாடல் ஆர்வலர்கள் ஊடாக வேட்டைக்காரர்களை இனங்காணல் மற்றும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் (NWCPU)

- இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பான பிரச்சாரம்

- 16 மாதிரி வலுவாதார கிராமிய செயற்திட்டம்

- பிரச்சார ஊடகமாக 10 டிஜிட்டல் பதாதைகளை பொருத்தும் செயற்திட்டம்

- ரம்புக்கன ஹிரிவடுன்ன கிராமத்தில் பொலித்தீனற்ற பாடசாலையொன்றை உருவாக்குதல் மற்றும் மாணவ மாணவிகளை அது தொடர்பாக வலுவூட்டுவதற்கு சாப்பாட்டுப் பெட்டிகள், போத்தல்கள், பாடசாலை பைகள், காகிதாதிகள் ஆகியனவற்றை பகிர்ந்தளித்தும், மாணவ மாணவிகளுக்கு சுண்ணாம்புக் கரும்பலகைக்குப் பதிலாக **White board** பொருத்துதலும்.

## 5.3. வருமானம் மற்றும் செலவினம்

(ரூ. '000)

| வகையறா | வருமானம் (ரூ.) |
|---|---|
| நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமதி | 2,633,575.83 |
| யால விற்பனை நிலையம் | 777,051.00 |
| வில்பத்து விற்பனை நிலையம் | 396,040.00 |
| பிரதான அலுவலகத்தின் விற்பனை | 65,497.00 |
| ஹோர்ட்டன்தென்ன விற்பனை நிலையம் | 970,300.00 |
| ரந்தெனிகல பயிற்சி நிலைய விற்பனை நிலையம் | 75,700.00 |
| மிருகக்காட்சிசாலை விற்பனை நிலையம் | 795,703.00 |
| உடவளவை விற்பனை நிலையம் | 1,304,965.00 |
| ரிதியகம விற்பனை நிலையம் | 911,050.00 |
| ரிதியகம உணவகம் | 654,135.00 |
| இடர்கடன் வட்டி | 1,911.00 |
| ரந்தெனிகல பயிற்சி நிலைய வருமானம் | (1,859,065.47) |
| ஹோர்ட்டன்தென்ன உணவகத்தின் வாடகை வருமதி | 4,445,000.00 |
| புகையிரத -காட்டு யானை மோதலைத் தடுப்பதற்கான முன்னோடி செயற்திட்டம் - உதவித் தொகை | 292,300.00 |
| உதவி–Maximus (Pvt) Ltd | 100,000.00 |
| வாழ்த்து அட்டை விற்பனையில் பெற்ற காசு | 63,000.00 |
| யால உணவகத்தின் வாடகை வருமானம் | 156,250.00 |
| சேவா பிரசாதனி 2017 நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக | 812,500.00 |
| BMICH இன் கண்காட்சி வருமானம் | 770,000.00 |
| டிஜிட்டல் பதாகை பொருத்துவதனால் பெற்ற வருமானம் | 150,000.00 |
| சொபாசிறி நிகழ்ச்சித்திட்டத்துக்கான உதவி | 500,000.00 |
| வலுவாதார நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக புத்தகங்கள், புத்தக குறியீடுகள் அச்சிடப்பட்டதனால் பெற்ற வருமானம் | 4,500,000.00 |
| வலுவாதார கிராமிய நிகழ்ச்சித்திட்டம் | 2,310,540.00 |
| பிரதான அலுவலகத்தில் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,162,710.00 |
| 10 வீடியோ நாடாக்கள் தயாரிப்பது தொடர்பாக | 240,500.00 |
| கண்காட்சி வருமானம் | 830,772.50 |
| உதவிகள் - FOG | 250,000.00 |
| வெனஸ (மாற்றம்) சஞ்சிகை அச்சிடல் | 386,970.00 |
| **மொத்த வருமானம்** | 23,697,404.86 |

## செலவினம்

(ரூ. '000)

| வகையறா | வருமானம் (ரூ.) |
|---|---|
| சம்பளம்—பிரதான அலுவலகம் | 3,720,915.56 |
| சம்பளம்—விற்பனை நிலையம் | 3,045,108.60 |
| மேலதிகநேர கொடுப்பனவு மற்றும் பிரயாணச் செலவு | 16,705.00 |
| தொலைபேசி கட்டணம் | 50,898.29 |
| மின்சார கட்டணம் | 1,936.40 |
| பொருள் வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | 2,777,049.00 |
| வாழ்த்து அட்டை அச்சிடலுக்கான செலவு | 37,000.00 |
| ரந்தெனிகல பயிற்சி நிலைய D2 பங்களா திருத்துதல் | 4,445,000.00 |
| எரிபொருள் | 195,705.00 |
| சில்லறைக் காசு மற்றும் முத்திரைக் கட்டணம் | 74,950.53 |
| காகிதாதிகள் | 64,679.25 |
| வாகன திருத்துதல் - 251-3758 | 39,425.00 |
| வாகன திருத்துதல் - CR-0127 | 95,270.00 |
| ரிதியகம அருந்தகத்திற்கான பொருட்கள் கொள்வனவு செய்தல் | 650,605.61 |
| ரீ சேர்ட் கொள்வனவு | 431,950.00 |
| **காப்புறுதித் தவணை - 251-3758** | 1,072.08 |
| புத்தக அச்சிடல் செலவுகள்—ஆசிரியரினால் அரைவாசிக் கொடுப்பனவு | 207,500.00 |
| புகையிரத -காட்டு யானை மோதலைத் தடுப்பதற்கான முன்னோடி செயற்திட்டம் | 502,832.57 |
| பிற | 134,131.15 |
| சேவா பிரசாதனி 2017 நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவுகள் | 536,500.00 |
| பிரதான அலுவலகத்திற்கு திரைச்சீலையிடல் | 50,000.00 |
| Change Beigns சஞ்சிகை அச்சிடல் தொடர்பாக | 129,000.00 |
| BMICH இன் கண்காட்சி தொடர்பான செலவுகள் | 904,836.00 |
| வலுவாதார நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக புத்தகங்கள், புத்தக குறியீடுகள் தொடர்பான செலவு | 3,625,000.00 |
| புத்தக அலுமாரி கொள்வனவு செய்தல் | 30,800.00 |
| ரந்தெனிகல பயிற்சி நிலையத்திற்கு மெத்தைகள் கொள்வனவு செய்தல் | 120,750.00 |
| ரந்தெனிகல பயிற்சி நிலையத்திற்கு கட்டில் விரிப்புக்கள், தலையணை உறைகள் கொள்வனவு செய்தல் | 31,250.00 |
| வலுவாதார கிராமிய நிகழ்ச்சித்திட்டம் | 704,443.56 |
| இணையத்தளம் தயாரித்தல் தொடர்பாக | 83,432.50 |
| பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் அச்சிடல் | 11,500.00 |
| சான்றிதழ்கள் அச்சிடல் | 44,250.00 |
| 10 வீடியோ நாடாக்கள் தயாரிப்பது தொடர்பாக | 70,000.00 |
| புத்தகங்கள் மற்றும் சுவரொட்டிகள் தயாரித்தல் | 1,149,346.00 |
| பிரதான அலுவலக நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவுகள் | 262,004.00 |
| கண்காட்சி செலவுகள் தொடர்பாக | 49,000.00 |
| ஒருநாள் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக | 6,090.00 |
| வெனஸ (மாற்றம்) சஞ்சிகை அச்சிடல் செலவு | 322,000.00 |
| **மொத்தச் செலவுகள்** | 24,622,936.10 |
| **இலாபம் / (நட்டம்)** | (925,531.24) |

## ரந்தெனிகல பயிற்சி நிலையத்தின் வருமானம்

| வருமானம் (ரூ.) | |
|---|---|
| பங்களா ஒதுக்குவதனூடாக பெற்ற வருமானம் | **2,342,683.00** |
| உணவகம் | **1,993,658.00** |
| விரிவுரை மண்டபம் | **9,625.00** |
| வாடகை வருமானம் | **18,000.00** |
| பிற | **20,806.44** |
| **மொத்த வருமானம்** | **4,384,772.44** |
| **செலவினம் (ரூ.)** | |
| சம்பளம் | **4,437,596.94** |
| உணவக செலவுகள் | **1,134,490.68** |
| நீர்ப்பட்டியல்கள் | **104,160.00** |
| தொலைபேசி செலவுகள் | **44,237.88** |
| மின்சாரம் | **356,799.41** |
| சில்லறைக் காசு | **69,473.00** |
| வாகனத் திருத்துதல் | **31,380.00** |
| எரிபொருள் | **47,500.00** |
| **மொத்தச் செலவுகள்** | **6,225,637.91** |
| **இலாபம் / (நட்டம்)** | **(1,840,865.47)** |